# இந்திய நாட்டினருக்கும் எதிரானதுதான் குடியுரிமைத் திருத்தச் சட்டம்

கொளத்தூர் மணி



# இந்திய நாட்டினருக்கும் எதிரானதுதான் குடியுரிமைத் திருத்தச் சட்டம்

கொளத்தூர் மணி

நிமிர்வோம்

# இந்திய நாட்டினருக்கும் எதிரானதுதான் குடியுரிமைத் திருத்தச் சட்டம்

கொளத்தூர் மணி
@திராவிடர் விடுதலைக் கழகம்

*முதல் பதிப்பு: பிப்ரவரி 2020*
*இரண்டாம் பதிப்பு: பிப்ரவரி 2020*

*வெளியீடு: நிமிர்வோம்*
*29, பத்திரிக்கையாளர் குடியிருப்பு,*
*திருவள்ளுவர் நகர்,*
*திருவான்மியூர், சென்னை - 41*
*செல்: 9444115113*

Youtube - இல் காண: https://youtu.be/ob2JIfAPPVI

தட்டச்சு: ஆசிரியர் சிவகாமி,
தமிழ்நாடு அறிவியல் மன்றப் பொறுப்பாளர்

பிழைத்திருத்தம்: வழக்கறிஞர் தடா ஒ. சுந்தரம்

அட்டை வடிவமைப்பு:
வி. தனலட்சுமி

பக்கங்கள்: 48

விலை ரூ: 15

அச்சிட்டோர் :
அன்பு அச்சகம்,
69, காக்காத்தோப்புத் தெரு,
மதுரை - 625001.

*[CAA, NRC என்றால் என்ன? வேலூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் குடியாத்தத்தில், 30.12.2019 அன்று நடத்திய கருத்தரங்கில், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்கள் நிகழ்த்திய விரிவான ஆய்வுரை.]*

*NPR, NRC, CAA சட்டங்களை திரும்பப் பெற வலியுறுத்தி 16.02.2020 அன்று கும்பகோணத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும், 21.02.2020 அன்று திருப்பூர் ஷாஹின்பாஃக் திடலில் நடைபெற்ற தொடர் முழக்கத் தர்ணா போராட்டத்திலும், 23.02.2020 அன்று ஈரோடு திருநகர் காலனியில் உலகத் தாய்மொழி நாள் பொதுக்கூட்டத்திலும் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்கள் நிகழ்த்திய உரையின் சுருக்கம்...*

# இந்திய நாட்டினருக்கும் எதிரானதுதான் குடியுரிமைத் திருத்தச் சட்டம்

கடந்த நூற்றாண்டில்தான் உலகில் பல தேசங்கள் உருவாகின. பத்தொன்பதாம் நூற்றாண்டில், ஐரோப்பிய நாடுகளில் இனம், மொழி, ஒருபரப்பு என்ற இலக்கணத்தின் அடிப்படையில் புதிய, புதிய தேசங்கள் உருவாகத் தொடங்கின. உருவான தேசம் எல்லாம் - அவை உருவாகுகிறபோதேகூட அவர்களுக்கான ஒரு மொழியை, அவர்களுக்கான ஒரு மதத்தைக் கொண்டிருந்தார்கள் என்பதோடு ஒவ்வொருவரும் தவறாமல் ஒரு எதிரியைச் சொல்லி வைத்தார்கள். இவர்கள்தான் எதிரி என்பதைக் காட்டிக்கொண்டே வந்திருக்கிறார்கள். ஆனால், நீண்ட காலத்திற்குப் பின்னால் இந்தியாவில் விடுதலைப் போராட்டம் என்ற ஒன்று நடந்தது. இந்தியாவை நாம் ஒரு தேசம் என்று ஏற்றுக் கொள்வதில்லை. பல தேசங்கள் சேர்ந்த ஒரு துணைக்கண்டம் தான். ஆனால் இது நாடு என்று பேசப்பட்டு வருவதால் அதையே நாமும் சொல்லுவோம்.

இந்த நாட்டுக்கான விடுதலைப் போராட்டம் தொடங்குகிறபோது ஒரு குறுகிய எல்லையோடு தொடங்கவில்லை. அப்படி ஒரு வாய்ப்பும் இல்லை. இது ஒரு மொழி என்று பேசவில்லை; ஒரு மதம் என்று கூறவில்லை; ஒரு எதிரியை விடுதலைப் போராட்ட காலத்தில் அதை முன்னின்று நடத்திய காந்தி போன்ற தலைவர்கள் முன்னிறுத்தவும் இல்லை. அப்போது பல மொழிகள் இருந்தன; பல இனங்கள் இருந்தன; பல மதங்கள் இருந்தன. அனைத்தையும் அரவணைத்தவாறே இந்திய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துப் போனார்கள் . அவர்கள் ஆங்கிலேயர்களைக்கூட எதிரியாகக் காட்டவில்லை. ஆங்கில நாட்டின் ஏகாதிபத்தியத்தை, வல்லாட்சியைத்தான் எதிரியாகக் காட்டினார்கள். அப்படித்தான் இந்த விடுதலைப் போராட்டம் தொடங்கியது.

விடுதலைப் போராட்டம் நடந்து கொண்டிருந்தபோதே இன்னொரு கூட்டம் தங்களை வளர்த்துக் கொண்டே இருந்தார்கள். மராட்டியத்தில் இருந்த பேஷ்வாக்கள் கையில் இருந்துதான் ஆங்கிலேயர்கள் நாட்டைக் கைப்பற்றினார்கள். அதோடுதான் ஆங்கிலேயர்கள் நாடு பிடிப்பது முடிந்தது. எனவே அவர்கள் கருதினார்கள், தாங்கள் நாட்டைக் கொடுத்த பின்னர்தான் இந்தியாவே முழுமை அடைந்தது; எனவே

இந்தியாவிற்கு விடுதலை என்ற ஒன்று வருமேயானால் அது எங்கள் கைக்கு வரவேண்டும் என்பதே அவர்கள் நோக்கம்; பேஷ்வா பார்ப்பனர்களின் நோக்கம். பார்ப்பனர்களிலேயே உயர்ந்த பார்ப்பனர்களாகக் கருதி கொள்பவர்கள் சித்பவன் பார்ப்பனர்கள்தான் ஆர்.எஸ்.எஸ் அய்த் தொடங்கினார்கள். இந்து மகா சபைக்காரர்களும் அவர்கள்தான். திலகரும் அதில் வந்தவர்தான். சுயராஜ்ஜியம் எனது பிறப்புரிமை என்று சொல்லிக் கொண்டே விநாயகர் சதுர்த்தியைக் கொண்டு வந்ததும் அவர்தான். இவர்கள்தான் இந்த நாட்டில் தலைமை தாங்கவேண்டும்; தங்கள் கைக்கு ஆட்சி வரவேண்டும்; தங்கள் விருப்பம்போல் நடக்கவேண்டும் என்றனர். இப்படி ஒருபக்கம் நடந்துகொண்டே இருந்தது. ஆனால், அவர்கள் விடுதலையைப் பற்றிப் பேசவில்லை. விடுதலை வந்த பிறகு நாடு நம் கைக்கு வரவேண்டும் என்று வேலை செய்துகொண்டிருந்தார்கள். அதற்கு எதற்கு வேலை செய்ய வேண்டும்? விடுதலைக்காக உழைத்த பல பேருக்கு எதிராகத்தான் அவர்கள் இருந்தார்கள். காந்தியை மட்டும் எதிர்க்கவில்லை. இப்போதெல்லாம் வீரர்களாகச் சொல்லி சிவாஜி படத்தைப் போட்டுக் கொள்கிறார்கள். சுபாஷ் சந்திரபோஸ் வேறுமதத்தைச் சார்ந்தவரா என்ன? அவர் உண்மையிலேயே படை நடத்தினார். ஆங்கிலேயரை வீழ்த்துவதற்காகப் படை நடத்தினார். மணிப்பூருக்கே வந்து விட்டார் அவர். அப்போது ஆங்கிலப் படையில் ஏராளமாகச் சேருங்கள் என்று அழைத்தவர்தான் சாவர்க்கர். இப்படி ஒரு கூட்டம் இன்னொரு பக்கம் வளர்ந்து கொண்டே இருந்தது. ஆனாலும்கூட இந்த நாட்டுக்கு ‘விடுதலை’ வந்த பின்னால் ஆட்சிக்குவந்தவர்கள், அப்போது ஆட்சியில் இருந்தவர்கள், இந்த நாட்டுக்கான ஒரு அரசியல் சட்டத்தை இயற்றவேண்டும் என்று கருதினார்கள். அதற்கான முன்மொழிவுகளைக் கொடுத்தார்கள். இருந்தாலும்கூட அதை வரையறுப்பதற்கு அரசியல் நிர்ணயக்குழு அமைக்கப்பட்டது. வரைவுக்குழுத் தலைவராகப் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். அது எழுதப்பட்டது; ஆனால் இன்னொரு பக்கத்தில், இங்கு பெரியாரைப் பொருத்தவரை அரசியல் அமைப்பை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில் தொடர்ந்து காங்கிரஸ் விடுதலைப் போராட்டக் காலத்தில் எல்லாம் சொல்லியே வந்தார்கள், வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை கொடுத்து அதன்வழியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கொண்ட அரசியல் நிர்ணயசபை தான் இந்தியாவுக்கான அரசியல் சட்டத்தை எழுதும் என்று. ஆனால் அமைக்கப்பட்ட அரசியல்

நிர்ணயசபை அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அவை அல்ல; ஒரு 10 விழுக்காடு 14 விழுக்காடு மட்டுமே வாக்குரிமை இருந்த காலத்தில்-அதுவும் கல்விகற்றவர்களுக்கு, வரிகட்டியவர்களுக்கு மட்டும் 'பட்டதாரிகளுக்கும் பட்டாதாரிகளுக்கும்' என்று பெரியார் சொல்லுவார்; அவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை இருந்த காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நமக்கான, ஏழை, எளிய, கிராமப்புற, உரிமை மறுக்கப்பட்ட மக்களுக்கான சட்டத்தை எழுதுவார்களா என்ற ஐயம் இருந்தது. ஆனாலும் அந்தத் தடைகளை மீறி எழுதினார் அம்பேத்கர். இழைக்கப்பட்ட, தடுக்கப்பட்ட தடைகளை மீறிப் பல செய்திகளை அவர் பதிவு செய்திருக்கிறார். அப்படி ஒரு சட்டம் எழுதப்பட்டது, அந்தச் சட்டத்தில் எது முதன்மையானது என்பதைப் பற்றிய கேள்வி ரொம்ப காலம் இருந்தது.

அரசியல் நிர்ணயசபையில் அது முடிந்து அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்தது 1950 ஜனவரி 26 - அதை அரசியல் சட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நாள் 1949 நவம்பர் 26 - அந்நாளை சட்ட தினம் எனச் சொல்லுகிறோம். அதனால் தான் அந்த நாளில் பெரியார் அரசியல் சட்டத்தை எரித்தார். அதற்கு முதல்நாள் அரசவையில் இந்தச் சட்டத்தை வைத்து இதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று முன்மொழிந்து உரையாற்றினார் புரட்சியாளர் அம்பேத்கர். அந்த உரை ஒரு நூலகத்துக்குள் போய் வெளியே வந்ததுபோல் இருக்கும். இந்தச் சட்டம் என்பது அமெரிக்க நாட்டினுடைய அரசியல் வல்லுநர் ஜெபர்சனை மேற்கோள் கட்டிச் சொன்னார், 'ஒரு தலைமுறைதான் ஒருதேசம். இந்த தலைமுறைக்கு நாங்கள் எழுதிய சட்டம் இது. அடுத்த தலைமுறைக்கு வேறு சட்டம்கூட தேவைப்படலாம். எனவேதான் திருத்துவதற்கான வாய்ப்புகள் கொடுத்திருக்கிறோம். வேறுபல நாடுகள் கனடா போன்ற நாடுகளின் அரசியல் சட்டத்தைத் திருத்தவே முடியாது. அப்படி எல்லாம் நாங்கள் வைத்திருக்கவில்லை' என்றெல்லாம் சொல்லுவார். கடைசியாக அவர் அந்த உரையை முடிக்கும்போது ஒன்று சொல்லி முடிப்பார். இறுதிக் கட்டத்தில் அவர் பேசுகிறபோது, 'இந்த அரசியல் சட்டத்தின் முகப்புரையை எழுதுகிறபோது அதனை இந்திய மக்களாகிய நாம் என்று தொடங்கி இருக்கும். என்னுடைய அரசியல் உணர்வுமிக்க நண்பர்கள் கேட்டார்கள், ஏன் இந்திய தேசத்தார் ஆகிய நாம் என்று எழுதக்கூடாது? என்று கேட்டார்கள். இந்திய தேசத்தார் ஆகிய நாம் என்று சொல்லலாமே என்று கேட்டார்கள். நான் அவர்களிடம் விளக்கம் சொன்னேன், நாம் எங்கே ஒரு

தேசமாக இருக்கிறோம், ஆயிரக்கணக்கான சாதிகளாகப் பிரிந்து கிடக்கின்ற நாம் எப்படி ஒரு தேசமாக முடியும்? இனிமேல்தான் தேசமாக வேண்டும்', என்று சொல்லிவிட்டு ஒன்றைச் சொன்னார், 'எது தேச விரோதமானது?, நேஷனல் விரோதமானது, *Caste is Anti National*, ஜாதிதான் தேச விரோதமானது', அதைத்தான் அவர் சொல்லிப் போனார். இப்போது வருபவர்கள் எதையெதையோ தேச விரோதம் என்கிறார்கள். அதைத்தான் (ஜாதி) அழிக்க வேண்டும் அதை இல்லாமல் செய்யவேண்டும். அதற்கு என்ன செய்வது? அதையும் அவர் அந்த உரையில் சொன்னார்.

'விடுதலை பெற்ற நாட்டில் ஒரு குடியரசாக மலரப் போகிறோம். முரண்பட்ட ஒரு ஆட்சியில் நாம் நுழையப் போகிறோம். இந்த நாட்டில் அரசியல், பொருளாதாரம், சமூகம் எனும் இந்த மூன்றில் அரசியலில் நாம் சம உரிமை பெற்றுவிட்டோம். அனைவருக்கும் ஒரு வாக்கு. ஒரு வாக்குக்கு ஒரு மதிப்பு - அது யாருடைய வாக்காக இருந்தாலும் ஒரே மதிப்பு, குடியரசுத் தலைவராக இருந்தாலும் ஏழை எளிய உழைப்பாளியாக இருந்தாலும் ஒரு மதிப்புதான். ஒரு மனிதனுக்கு ஒரு வாக்கு, வாக்குக்கு ஒருமதிப்பு என்று இருக்கிறது, ஆனால் ஒரு மனிதனுக்கு ஒரு மதிப்பு - ஒருமனிதன் = ஒரு மதிப்பு என்று இன்னும் ஆகவில்லை. அரசியலில் மட்டும் அதைப் பெற்றிருக்கிறோம். இந்த அரசியல் சட்டத்தைப் பயன்படுத்தி பொருளாதாரத்திலும், சமூகத்திலும் அந்த சமத்துவத்தை ஏற்படுத்த வேண்டும். ஏற்படுத்தத் தவறுவோமேயானால் நாங்கள் பேருழைப்பைச் செலுத்தி உருவாக்கிய இந்த அரசியல் சட்டத்தைப் பாதிக்கப்பட்ட மக்கள் தகர்த்துவிடுவார்கள்' என்று அவர் சொன்னார். இல்லாவிடில் இன்னொருமுறை நாம் விடுதலைக்காகப் போராடும் சூழல் வந்துவிடும்.. பல எடுத்துக்காட்டுகளைச் சொல்லியிருக்கிறார் ஏனெனில் அரசியல் சட்டம் என்பது அதுவாகப் போய்ச் செயல்படாது. அதைச் செயல்படுத்த ஒரு அரசு வேண்டும்.

அரசியல் சட்டம் எவ்வளவு நல்லதாக இருந்தாலும் சிறந்ததாக இருந்தாலும் அதை எடுத்துக் கையாள்பவர் அவர் நல்லவராக இல்லை என்றால் இது பயன் படாமல் போய்விடும். இதில் சில குறைபாடுகள் தெரிந்தாலும் எடுத்து நடைமுறைப் படுத்துபவன் சரியாக இருந்தால் இது சிறப்பாகப் செயல்படும். நாடு நன்றாக இருக்கும்.

இப்போது பல சட்டங்கள் வந்து கொண்டிருக்கின்றன. சட்டங்களாக ஆக்கப்படுவதற்கு முன்னால் சில சட்டங்களை நாம் நினைவில் கொள்ளவேண்டும். ஒன்று இந்த நாட்டில் நாம் கல்வியற்றவர்களாக இருந்தோம். இந்த நாட்டில் ஆட்சியை எப்போதும் கையில் வைத்திருந்தவர்கள் உயர்சாதிக் கூட்டத்தார் தான், பார்ப்பனர்கள் தான். ஆரம்பகாலத்தில் இந்து மதத்தின் பேரால், வர்ணத்தின் பேரால் ராஜ குருக்களாக, அமைச்சர்களாக ஆட்சியாளராக வந்தனர். பின்னால், முற்றுமுழுதாக இவர்களுக்கு முரணான தத்துவங்களைக் கொண்டிருந்த இஸ்லாமிய ஆட்சியில் கூட இவர்கள் தான் அமைச்சர்களாக, ஆலோசகர்களாக உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் புராணக் கதையிலேயே எழுதி வைத்திருக்கிறார்கள். இந்திரர்கள் தான் மாறுவார்களாம். இந்திராணி தொடர்ந்து ஒருத்தியே தான் இருப்பாளாம் என்பதைப்போல இந்த நாட்டில் எந்த ஆட்சி வந்தாலும் இவர்கள்தான் உட்கார்ந்து அதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருந்தார்கள், அப்போது எவ்வளவு மோசமாக நடந்திருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாதவனோடு இணைந்து போகமுடியுமா, அவர்கள் போனார்கள். பெரியார் அழகாகச் சொல்லுவார், நமக்கெல்லாம் கூட சுயநலம் இருக்கிறது. ஒவ்வொருவனுக்கும் ஒரு சுயநலம் இருக்கும். பார்ப்பானுக்கு மட்டும்தான் இனசுயநலம் *(communal selfishness)* இருக்கும். நமக்கெல்லாம் இருப்பது தனிநபர் சுயநலம் *(Individual selfishness)*

ஒரு பார்ப்பனரிடம் சும்மா கேளுங்கள் 'என்னங்க பையன் தண்ணி போட்டிருக்கான்' என்றால் ஒரு ஐயர் போடுறதுக்காக ஏங்க நீங்க எங்களையெல்லாம் திட்டுறீங்க என்பான். இவன் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பேசுவான். 'ஏங்க நானும்தான் தண்ணி போடுறேன், கறி சாப்பிடுறேன் நீங்க பாத்து இருப்பீங்களே' என்று கூறுவான். தான் செய்யும் தவறைக்கூட தன்னை, தன் இனத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் ஒரு கருவியாக மாற்றிக் கொள்ளும் சக்தி உள்ளவன்தான் அவன். நாம் அப்படி அல்ல. நாம் கல்வி கற்கக் கூடாது என்று வைத்து இருந்தான், எதையும் தெரிந்துகொள்ளக்கூடாது; அதற்கு வேதத்தில் கடவுள் சொன்னார் என்று சொன்னான். நம்மவர்கள் எதற்கு பயப்படுவார்கள்? கடவுள் சொன்னால்தான் பயப்படுவார்கள்.

நாம் என்றால் இந்தியாவில் எல்லா பகுதியும் அப்படி இருந்தது. நாம் அப்படி இருக்கவில்லை. தமிழனுடைய இலக்கியங்களில் யார் யாரோ பாடல்கள் எழுதி இருக்கிறார்கள். நம்முடைய சங்க இலக்கியங்கள் மிக உயர்ந்த தத்துவங்களைக் கொண்டவை. கருத்தோட்டத்தை கொண்டவை. உலகம் வியக்கிற இலக்கியங்களைப் படைத்தவர்கள் யாரென்று பார்த்தீர்கள் என்று சொன்னால், கொல்லன் அழிசி பாடல் எழுதியிருக்கிறார். குற மகள் இளவெயினி பாடல் எழுதி இருக்கிறார். வெண்ணிக் குயத்தி எழுதி இருக்கிறார். பெருந்தச்சன் எழுதி இருக்கிறார். கூல வாணிகன் சாத்தன் எழுதி இருக்கிறார். எல்லாத் தொழில் செய்கிற ஆண்களும், பெண்களும் கவி பாடும் ஆற்றல் உள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள். வடக்கில் வேண்டுமானால் படிக்காமல் இருந்திருப்பான். இடைக்காலத்தில் என்ன நடந்தது என்று பேச மாட்டான். ஆங்கிலேயன், வருகிறவரை நீதிக்கட்சி ஆட்சி வருகிறவரை பொதுக்கல்வி நம்ம ஊரில் இருந்ததா, ஒரு பள்ளிக்கூடம் இருந்ததா, பொதுக் கல்விமுறை இருந்ததா? ஆங்கிலேயன் இந்த நாட்டுக்கு வருகிறவரை இருந்ததா? ஏன் இல்லை ? இடையில் என்ன நடந்தது? அதைச் சரிசெய்வதற்கான முயற்சியில் இறங்கிய இயக்கங்களில் இங்கு முதன்மையான இயக்கங்கள் பார்ப்பனர் அல்லாதார் இயக்கம், தென்னிந்திய நல உரிமைச் சங்கம், நீதிக்கட்சி, திராவிட இயக்கம் ஆகும்.

இந்த நாட்டிற்கு சுதந்திரம் வருவதற்கு முன்னாலேயே ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே கல்வியில், வேலை வாய்ப்பில் பல உரிமைகளைப் பெற்றவர்களாக நாம் இருந்திருக்கிறோம். மண்டல் ஆணையம் வந்த பின்னர்தான் மத்திய அரசுப்பணிகளில் இட ஒதுக்கீடு வந்தது. ஆனால் 1935-ஆம் ஆண்டே மத்திய அரசுக்கு ஒரு நெருக்கடி கொடுத்தார்கள் தமிழ்நாட்டுத் தலைவர்கள். சென்னை மாகாண பார்ப்பனரல்லாதார் சிறப்பு வகுப்புவாரிச் சட்டம் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். சென்னை மாகாணத்தில் இருக்கிற மத்திய அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு உண்டு. இங்கே மட்டும் உண்டு. இந்தியா முழுவதும் இல்லை; இங்கே சென்னை மாகாணத்தில் இருக்கிற வங்கிகளில், தொடர் வண்டித்துறையில், அஞ்சல்துறை, சுங்கத்துறையில் எல்லாவற்றிலும் இட ஒதுக்கீடு உண்டு. அப்படிப்பட்ட உரிமைக்குரியவர்களாக நாம் இருந்திருக்கிறோம்.

அப்படிப்பட்ட இயக்கங்கள் நம்மை கல்வியில், வேலை வாய்ப்பில் அமர வைத்து இருந்தது. ஆனால் அரசியல் சட்டம்

நடைமுறைக்கு வந்த பின்னால் இவை எல்லாம் தகர்க்கப்பட்டன. பல காரணங்களைச் சொல்லித் தகர்த்தார்கள். கல்வியில் இட ஒதுக்கீடே இல்லை என்று சொல்லிவிட்டார்கள்,

தமிழ்நாட்டின் இடஒதுக்கீட்டில், சென்னை மாகாணத்தில் பார்ப்பனர்களுக்கு, பார்ப்பனர் அல்லாதாருக்கு, இஸ்லாமியருக்கு, கிறுத்துவர்களுக்கு, தாழ்த்தப்பட்டவகளுக்கு எல்லோருக்கும் இட ஒதுக்கீடு இருந்தது. 100 இடங்களையும் பிரித்துக் கொடுத்த முறைதான் நம்முடைய முறை; வகுப்புவாரி முறை. ஆனால் அதையெல்லாம் இந்தியாவிற்கு விடுதலை வந்த ஒன்றரை மாதங்களில் ஒழித்தார்கள். மத்திய அரசுப் பணிகளில் நமக்கு இருந்த இட ஒதுக்கீடு என்பது 1947 செப்டம்பர் 30-ஆம் நாள் இரத்து செய்யப்பட்டது. அதுதான் விடுதலை. அவர்களுக்கு விடுதலை. அவர்கள் நினைத்ததைச் செய்து கொண்டார்கள். மீண்டும் அந்த உரிமையைப் பெறுவதற்கு எவ்வளவு காலம் காத்திருந்தோம்

அம்பேத்கர் அரசியல் சட்டத்தில் எழுதிவிட்டுப் போனார் 340 என்று ஒரு பிரிவு. 1935-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பில் பழங்குடிகளும், தாழ்த்தப்பட்டவர்களும் பட்டியல் படுத்தப்பட்டு விட்டார்கள்; 1935-ஆம் ஆண்டு சட்டத்திலேயே வந்துவிட்டது என்று அவர்களது மக்கள் தொகைக்கு ஏற்ப அளித்து விட வேண்டும். பிற்படுத்தப் பட்டோர் என்ற பெரும் மக்கள் தொகைக்குப் பட்டியலே இல்லை. பட்டியலை எடுப்பதற்கு ஒரு ஆணையம் அமைத்து அவர்களுக்கான மேம்பாட்டுக்கான உதவிகளைச் செய்யவேண்டும். இதுதான் எழுதப்பட்ட சட்டம், அவர் சட்ட அமைச்சர் பதவியில் இருந்து போனதற்கான நான்கு காரணங்களில் ஒருகாரணம் பிற்படுத்தப்பட்டோருக்கான ஆணையம் அமைக்கப்படவில்லை என்பது.

ஒரு தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவராக மட்டும் ஒதுக்கி வைக்கப்படுகிற அம்பேத்கர்தான் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு வழங்குவதற்காக, ஆணையத்தை ஏன் அமைக்கவில்லை என்பதையும் தன் பணித்துறப்பிற்கான காரணங்களில் ஒன்றாகச் சொன்னார். அதற்குப் பின்னால் 1953-இல் காகா கலேல்கர் தலைமையில் ஆணையத்தை அமைத்தார்கள். பிற்படுத்தப்பட்டோருக்கு என்ன செய்யலாம் எனபதை முடிவு செய்ய ஒரு பார்ப்பனர் தலைமையில் குழு அமைத்தார்கள். ஒரு இந்து கோயிலுக்கு என்ன பண்டிகை நடத்தலாம் என்பதை முடிவு செய்ய ஒரு இஸ்லாமியர்

தலைமையில் குழு அமைப்பார்களா? ஆனால் நமக்கு அப்படித்தான் அமைத்தார்கள். ஆனால் அவர் ஆராய்ச்சி எல்லாம் செய்து விட்டுக் கடைசியாக ஜாதி அடிப்படையில் கொடுக்க விருப்பம் இல்லை என்று சொல்லி விட்டுப்போய் விட்டார். மீண்டும் குழு வருவதற்கு எவ்வளவு நாள் ஆனது? ஜனதா கட்சி தன் தேர்தல் வாக்குறுதியில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பிற்படுத்தப்பட்டோருக்கு 25 முதல் 30 விழுக்காடுவரை இடஒதுக்கீடு அளிப்போம் என்று வாக்குறுதி அளித்தார்கள். அதன் பின்னால் மண்டல் ஆணையம் அமைக்கப்பட்டது. இடஒதுக்கீடு வந்தது. ஒரு ஒதுக்கீட்டைக் கொடுப்பதற்கு எத்தனை ஆண்டு காலம் போராட்டம் நடந்திருக்கிறது பாருங்கள். 1947-இல் இழந்த ஒதுக்கீடு, 1993-இல் தான் நமக்கான மத்திய அரசு வேலைவாய்ப்புகளில் 2006-இல் தான் மத்திய அரசின் கல்வி நிலையங்களில் கொடுக்கப்பட்டது. எத்தனை ஆண்டுகள் காத்திருந்தோம்? ஐம்பது அறுபது ஆண்டுகள் காத்திருந்திருக்கிறோம் ஒரு சட்டத்தை நிறைவேற்ற.

தமிழ்நாட்டில் நடந்த, பெரியார் முன்னெடுத்தப் போராட்டத்தினால், அரசியல் சட்டத்தில் செய்யப்பட்ட முதல் திருத்தத்தால், கல்வியில் இட ஒதுக்கீடு 1951-இல் வந்தது. அதற்கு முன்னாள் கல்வி நிலையங்களில் யாருக்குமே இட ஒதுக்கீடு இல்லை; பிற்படுத்தப்பட்டோருக்கு மட்டுமில்லை; தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் யாருக்குமே இல்லை. கல்வி நிலையங்களில் இடஒதுக்கீட்டைப் பற்றி அரசியல் சட்டத்திலேயே இல்லை. இங்கு தமிழ்நாட்டில் பெரியாரும் இங்கிருந்த தலைவர்களும் எடுத்த போராட்டம்தான் கல்வி நிலையங்களில் இடஒதுக்கீடு உண்டு என்ற சட்டத் திருத்தத்தைக் கொண்டுவரச் செய்தது

அப்படியே இன்னொரு செய்தியைப் போய் பாருங்கள். இரண்டு சட்டத் திருத்தங்களை நிறைவேற்றி இருக்கிறார்கள். இந்த உயர்ஜாதி ஏழைகளுக்கு 10 விழுக்காடு இடஒதுக்கீடு கொடுத்தார்கள். ஏழைகளுக்குக் கொடுத்து இருந்தால்கூட எவ்வாறாகவாவது நியாயப்படுத்தலாம். உயர்ஜாதி ஏழைகளுக்குக் கொடுத்தார்கள். ஏழைகள் என்பதற்கு அந்த சட்டத் திருத்தம் ஒரே ஒரு அளவுகோலை வைத்திருந்தது. ஆண்டுக்கு 8 இலட்சத்திற்குக் குறைவாகச் சம்பாதிப்பவர்கள் ஏழைகள். ஒரு மாதத்துக்கு 66,665 சம்பாதித்தால் ஏழை 66,666 சம்பாதித்தால் நீங்கள் பணக்காரர்கள்.

பார்ப்பனர்கள் மூன்று விழுக்காடுதான். தமிழ்நாட்டில் 10 விழுக்காடு இடஒதுக்கீட்டைக் கொண்டு வந்தார்கள். அதை எப்படிக் கொண்டு வந்தார்கள் என்பதை, தொடர்பான தேதிகளை மட்டும் சொன்னால் நீங்கள் புரிந்து கொள்ளலாம். அமைச்சரவை இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று ஜனவரி 7 ஆம் தேதி 2019-இல் அமைச்சரவை முடிவு எடுத்தது. எட்டாம் தேதி கொண்டுவந்து மக்களவையில் வைக்கிறார்கள் விவாதத்திற்கு. உடனே வாக்கெடுப்பு; ஏற்றுக் கொள்ளப்படுகிறது; 9-ஆம் தேதி மாநிலங்களவையில் வைக்கிறார்கள். மாநிலங்கவை ஏற்றுக்கொண்டு விட்டது. 12-ஆம் தேதி குடியரசுத் தலைவர் சமூக அக்கறையின்றி மூன்று நாட்கள் தாமதமாகக் கையெழுத்துப் போட்டார். அப்படியே நிறைவேற்றி விட்டார்கள்.

370-ஆவது பிரிவு காஷ்மீருக்கான சிறப்புரிமை, இரத்து செய்யப்பட்டது. எத்தனை நாளானது அதற்கு? ஆகஸ்ட்-5 அறிவித்துவிட்டு மாநிலங்களவையில் வைத்து வாக்கு வாங்கி விட்டார்கள். 6-ஆம் தேதி மக்களவையிலும் ஏற்றுக் கொள்ளச் செய்யப்பட்டு விட்டது. அதற்கு ஒருநாள்கூட வீணாக்கவில்லை.

இப்போது குடியுரிமைத் திருத்தச் சட்டம். முதல் நாள் அமைச்சரவை முடிவு செய்து 10.12.2019 மக்களவையில் வைத்தார்கள். மக்களவை ஏற்றுக் கொண்டுவிட்டது. 11-ஆம் தேதி மாநிலங்களையில் வைத்தார்கள்; ஏற்றுக் கொண்டுவிட்டது. இந்த முறை குடியரசுத் தலைவர் எந்தவித காலதாமதமும் செய்யாமல் 12-ஆம் தேதியே கையெழுத்தும் போட்டு விட்டார். உடனே சட்டம் வந்து விட்ட.து ஒரு சட்டம் வருவதற்குத் தேவை மூன்று நாட்கள்தான். அங்கு இருக்கிற அனைத்துக் கட்சிகளும் கொடுக்கப்பட்ட சட்டவரைவைப் படித்துப் பார்த்து வாதிடவேண்டும்; பிறகு எதிர்க்கருத்து சொல்ல வேண்டும். அதற்கெல்லாம் வாய்ப்பே இல்லை. முழுமையாக அறியாமல் பல பேர் வாக்களித்தும் விட்டார்கள். இப்போது நடப்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அந்த பாரதிய ஜனதாவினுடைய கூட்டணிக் கட்சிகளான ஐக்கிய ஜனதாதளம் நிதிஷ்குமார், அகாலிதளம் இரண்டு பேரும் வாக்களித்தவர்கள் தான். யோசிப்பதற்கு நாள் தேவைப்பட்டிருக்கிறது. இப்போது இரண்டு கட்சிகளும் குடியுரிமைப் பதிவேட்டுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். ஆதரவாக வாக்களித்தவர்களான பிஜு பட் நாயக் இப்போது எதிர்க்கிறார். தெலுங்கானா ராஷ்ட்ரீய சமிதி ஆதரித்தது,

*வாக்களித்தார்கள், இப்போது எதிர்க்கிறார்கள். ஒருவேளை கொஞ்சம் கால அவகாசம் கொடுத்து இருந்து, பின்னர் இந்த சட்டவரைவு விவாதத்துக்கு வந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? அப்போது மாநிலங்களவையில் 125 பேர் சட்டத்திற்கு ஆதரவாகவும், 99 பேர் எதிராகவும் வாக்களித்தார்கள். இப்போது யோசித்துப் பாருங்கள். அகாலிதளம், ஐக்கிய ஜனதா தளம் 6 இடங்களும், பிஜு ஜனதா தளத்துக்கு 7 இடங்களும், YSR காங்கிரசுக்கு 2 இடங்களும், தெலுங்கானா ராஷ்ட்ரீய சமிதிக்கு 6 இடங்களும், மாநிலங்களவையில் இருக்கின்றன; இவர்களெல்லாம் மாற்றி வாக்களித்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? ஆதரவு வாக்குகள் 21 குறைந்திருக்கும்; எதிர்த்த வாக்குகள் 21 அதிகமாகியிருக்கும்; 125 என்பது 21 குறைந்து 104 ஆகியிருக்கும்; எதிர்த்து வாக்களித்தோர் 99 என்பது 120 ஆகியிருக்கும். சட்டம் நிறைவேறியிருக்காது.*

*அதனால்தான் அவர்கள் அவசரம் அவசரமாகக் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். அதைப் பற்றி விவாதிப்பதற்குக்கூட கால அவகாசம் கொடுக்கவில்லை. நாடாளுமன்றம்தான் உயர்ந்த அவை. அரசியல் சட்டத்தை திருத்துகிற அதிகாரம் கொண்ட அவை. அதில் திருத்தம் செய்வதற்கான 368-ஆவது பிரிவு இருக்கிறது. அதில் கூட விரிவாக ஆலோசித்துப் படித்து விவாதிப்பதற்கு நேரம் கொடுக்காமல் வாக்கெடுப்பை நடத்துகிறார்கள்.*

*ஜனநாயகம் என்பதே பெரும்பான்மைதான். ஜனநாயகம் என்கிற அராஜகம் என்று கூட சொல்லுவார்கள். சில பேர் ஜனநாயகம் என்கிற சர்வாதிகாரம் என்று கூட சொல்கிறார்கள். ஏனென்றால் பெரும்பான்மை நினைத்ததை எல்லாம் செய்ய முடியும் என்பதுதான் ஜனநாயகம் என்று சொல்கிறர்கள். ஆனால் அப்படி எப்படி இருக்கமுடியும்? சிறுபான்மையினர் நலத்தைப் பேணுவதுதான் ஜனநாயகமாக இருக்க முடியும். அப்படியும் அது பெரும்பான்மையும் இல்லை. பெரும்பான்மை என்றால் பார்ப்பனரா பெரும்பான்மை? பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் சேர்ந்தால்தான் பெரும்பான்மை. அப்படி எனில் நமது ஆட்சி தானே நடக்க வேண்டும். அப்படியா நடக்கிறது?*

*அமெரிக்காவில் சொல்வார்கள் கருப்பர்கள் மீது தாக்குதல் என்று. வெள்ளையர்கள் பெரும்பான்மை. எனவே கருப்பர்களை*

ஒடுக்கினார்கள். ஆனால் இங்கே நாம் கருப்பர்கள் தான் பெரும்பான்மையாக இருக்கிறோம். வெள்ளையர்கள் 3 விழுக்காடு தான் இருக்கிறார்கள். இங்கே சிறுபான்மையினர் தான் பெரும்பான்மையினரை ஒடுக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவில் பாகிஸ்தான் பிரிப்பதற்கு காங்கிரஸ் ஒத்துக் கொள்ளவில்லை. இவர்கள் தன் மீதான பழியைச் சுமப்பதற்குப் பதில் பிறர் மீது தள்ளி விட்டுப் போவார்கள். மாநிலங்களுக்கு தன்னாட்சி கொடுத்திருந்தால் அந்த நாடுகளெல்லாம் இங்கேயே இருந்திருக்கும். அவர்களேதங்களுக்குத்தேவையானதைச்செய்து கொண்டிருப்பார்கள். அதுதான் காங்கிரஸ் திட்டமாக இருந்தது 1946 வரைக்கும். எய்ம்ஸ் அண்டு அப்ஜெக்ட்ஸ் என்று 1946-இல் நேரு அரசியல் சட்டத்தை கொண்டு வந்து அறிமுகப்படுத்திப் பேசினார்; அதிலேயே சொன்னார், நான்கைந்து அதிகாரங்களைத் தவிர மற்ற அனைத்தும் மாநிலங்களுக்குத்தான் என்று. அதற்காக அரசியல் நிர்ணய சபையைக் கூட்டி கடைசியாக மாநிலங்களுக்கு அதிகாரம் இல்லாததாக முடிந்து போனது. பாகிஸ்தான் பிரிந்தது; பிரியக்கூடாது என்று கடைசிவரை சொல்லிக் கொண்டுவந்தவர்கள் யாரென்றால் காந்திதான்; காங்கிரசுதான். நேருதான் பிரிந்து செல்லவேண்டும் என்றகருத்துள்ளவராகத்தான் இருந்தார். அப்போது பெரியாரும் அதே கருத்தோடு இருந்தார். இந்துக்களிடம் பணிந்து, பயந்து வாழ்வதைவிட பிரிந்துபோய் தனியாக மானத்தோடு, கௌரவமாக, கண்ணியமாக வாழட்டும் என்று கருதினார்கள். ஆனால், இவர்கள் எல்லாம் ஏன் ஒற்றுமை ஏற்படுத்த முடியாது என்று முயற்சி செய்தார்கள். யார் அன்று இரண்டாகப் பிரியவேண்டும் என்பதைச் சொன்னவர்கள்? 3 பேரின் பெயரை மட்டும் சொல்லிவிட வேண்டும். ஆரிய சமாஜம் என்ற அமைப்பைப் பற்றி கூட தோழர் பேசினார்; அதில் பாய்பரமானந்தர் என்று ஒரு முக்கியத் தலைவர் இருந்தார். அவர் தன்னுடைய வாழ்க்கை வரலாற்றை 'எனது வாழ்க்கைக் கதை' என்று எழுதி இருக்கிறார். அதில் "சிந்து பகுதிக்கு அப்பாற்பட்ட நிலப்பரப்பை ஆப்கானிஸ்தானுடனும், வடமேற்கு எல்லை மாகாணத்துடனும் இணைத்து முஸல்மான்களின் பெரிய ஆட்சியை உருவாக்கவேண்டும். அங்கு வாழும் இந்துக்கள் வெளியேறி இங்கே வர வேண்டும். இங்கு வாழும் முஸல்மான்கள் வெளியேறி அவர்கள் பகுதிக்குப் போய்விட வேண்டும் என்று 1908 இல் எழுதினார்.

அதற்கு அடுத்தவர் வீர சாவர்க்கர். அவர் வீரசாவர்க்கர் என்பதே கேலிக்கூத்தான கதை. சவர்க்கரின் வாழ்க்கை

வரலாற்றை 'சித்ரகுப்தா' என்ற ஒருவர் எழுதினார். அந்த நூலுக்குத்தான் தலைப்பிட்டார், 'வீர்' சாவர்க்கர் என்று. அவரது பெயர் வினாயக தாமோதர சாவர்க்கர்தான். பிறகு அந்தப் புத்தகம் இரண்டாம் பதிப்பாக 1979-இல் வந்தபோது எழுதப்பட்ட பதிப்புரையில்தான் 'சித்ரகுப்தா' என்பவர் வேறு யாருமல்ல; அது சாவர்க்கரே தான் என்று தெரிந்த்து. இவரே இவரை வீரர் என்று சொல்லிக் கொண்டார். அவர்தான் இந்து மகாசபையின் தலைவர். அவர் படத்தைத்தான் நாடாளுமன்றத்தில் திறந்தார்கள்.

காந்தி இருக்கும் இடத்திலேயே அவரும் இருக்கிறார். காந்தி கொலை வழக்கில் இருப்பவர், காந்திக்கு முன்னாலேயே இருக்கிறார் நாடாளுமன்றத்தில். அவர் ஒன்றைச் சொல்லுகிறார், இந்தியாவில் இரண்டு முரண்பட்ட தேசங்கள் அருகருகே வாழ்ந்து கொண்டிருக்கின்றன. ஒன்று இந்துக்கள் தேசம்; மற்றொன்று முஸ்லிம்கள் தேசம். இரண்டும் ஒரே தேசமாக முடியாது என்று 1937-இல் அகமதாபாத்தில் அவர்களுடைய மாநாட்டில் அவர் ஆற்றிய உரை.

அதற்குப் பிறகு கோல்வால்க்கர், அவர்தான் ஆர்.எஸ்.எஸ். இக்குத் தத்துவத்தைக் கொடுத்தவர். அவர் எழுதுகிறார்

'இந்துக்கள் அல்லாதவர்கள் இந்துக் கலாச்சாரத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்து மதத்தைப் புகழ்ந்து பேச வேண்டும். இது தவிர அவர்களுக்கு வேறு எந்த சிந்தனையும் இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் இந்தியாவில் வாழலாம்' என்று ஒரு அனுமதி கொடுக்கிறார் அவர். அப்படி எனில், ஏன் முஸ்லீமாக இருக்கிறார்கள்? ஏன் கிறிஸ்தவராக இருக்கிறார்கள்? அதை 1939-இல் அவர் ஒரு புத்தகமாக எழுதினார். *(We or Our Nation hood Defined)* அப்படி எனில், எப்போது முகமது அலி ஜின்னா தனிநாடு வேண்டும் என்று கேட்டார்? 1940 மார்ச் மாதம்தான் அவர்கள் பாகிஸ்தான் என்ற தனி நாடு வேண்டும் என்கிற தீர்மானத்தைப் போடுகிறார்கள். ஆனால் இவர்கள் 1937-இல், 1939-இல் ஏன் 1908-இலேயே இரண்டு நாடுகள் தான், ஒன்றாக இருக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள். இவர்கள்தான் இப்போது சொல்கிறார்கள் காங்கிரஸ்தான் நாட்டை பிரித்தது என்று. இவர்கள் சமத்துவத்தை விரும்பாதவர்கள். சமத்துவம் பேசுபவர்கள்தான் இவர்களுக்கு எதிரி.

இஸ்லாமியர்கள் எல்லோரையும் ஒன்றாக இருக்கச் சொல்கிறார்கள்; எனவே இஸ்லாமியர்கள் எதிரி. 'நாங்கள்

எவ்வளவு காலம் தொடாமல் கும்பிடச் சொல்லிக் கொடுத்தோம். நீங்கள் தொட்டுக் கொள்கிறீர்கள், கட்டிப் பிடிக்கிறீர்கள்' என்கிற கோபம் கூட அவர்களுக்கு இருக்கும். கோல்வால்கர் சொன்ன ஒரு வார்த்தையைச் சொல்ல வேண்டும் இந்த நேரத்தின் அவசியம் என்ன வென்றால் *the need of hour is not equality, its harmony* என்றார். சமத்துவம் எல்லாம் இப்போது தேவையில்லை. எல்லாரும் இணக்கமாக வாழ வேண்டும் என்றார். நம்மவர்கள் கூட்டத்தில் பேசும்போது பேசுவார்கள் தமிழா! வா ஜாதியை மறந்து, மதங்களை மறந்து கூட்டத்திற்கு வா என்பார்கள். அப்படி எனில் என்ன பொருள்? வீட்டுக்குப் போனதும் நினைத்துக் கொள் என்று பொருள். அப்படி இருக்கிற சமத்துவத்தைப் பேசுகிறார்கள்.

ஆர்.எஸ்.எஸ்.காரனிடம் இருக்கும் வஞ்சகத்தனமும் சூழ்ச்சியும் கொஞ்ச நஞ்சமல்ல தோழர்களே. அவர்கள் ஒரு அமைப்பை உருவாக்கினார்கள். 'சமாஜிக் சமரஸ்தா' என்பது அது. தமிழில் சொல்ல வேண்டுமெனில் 'சமூக நல்லிணக்கப் பேரவை'. அதில் சொல்கிறார்கள் நீ இந்துவாகப் பிறந்து விட்டாய். அதுவே பெரிய பெருமை. ஜாதியைப் பற்றியெல்லாம் ஏன் நினைத்துக் கொண்டிருக்கிறாய்? எங்கள் மதத்தில், வேதத்தில் ஜாதி வேறுபாடு பற்றி இல்லை. இவர்கள் சும்மா சொல்கிறார்கள். அதைப் பற்றிக் கவலைப்படாதே வா. நமக்கு ஒரு எதிரி இருக்கிறான் வா அவனிடம் போவோம். இந்த துலுக்கனுங்க நமக்கு எதிராகவே வேலை செய்கிறார்கள். அவனைப் பார் என்கிறார்கள்.

அப்போதே சொன்னேன்; விடுதலைப் போராட்ட காலத்தில் எதிரி யார் என்பதை விடுதலைப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறவர்கள் சொல்லவில்லை. ஆனால் இவர்கள் எதிரி யார் என்பதைச் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். ஏமாந்து போகிற போதெல்லாம் சொல்கிறார்கள் இதற்குத் தான் அப்போதே ஆரம்பித்தான் 'சமாஜிக் சமரஸ்தா'. நமக்குள் ஆயிரம் பிளவுகள் இருக்கலாம் ஆனால் எதிரிக்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதுதான் இதன் தத்துவம். அதற்கு ஒரு பெயர் வைத்தான் சமூக நல்லிணக்கம் என்று. அதை இன்று வரை நாம் சொல்லிக் கொண்டே இருக்கிறோம்.

சமூக நல்லிணக்கம் என்பது ஆபத்தான சொல் என்றுதான் சொல்கிறோம். அதைப் புரிந்துகொண்டு, ஏற்றுக் கொண்டுதான்

இணைந்து வாழ முடியும். சமத்துவமாக இருந்தால் உன்னோடு இணைந்து வாழ்வேன். எவ்வளவு நாளைக்கு நான் பேசாமல் இருக்க முடியும்? பெரியார் வேடிக்கையாகச் சொல்வார். தமிழ்நாடு தனி நாடு கேட்ட போது 1962 இல் ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். தேர்தலில் நிற்பவர்கள் ஒரு கையெழுத்துப் போட வேண்டும் இந்தியாவின் ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்டுள்ளேன் என்று. தேர்தலில் நிற்க வேண்டுமென ஆசைப்பட்டால் அதில் கையெழுத்துப் போட வேண்டும். அது தமிழ்த் தேசிய வீரர் சீமானாக இருந்தாலும் சரி; அய்யா நெடுமாறனாக இருந்தாலும் சரி, இதை ஒத்துக் கொண்டால்தான் கட்சியைப் பதிவே செய்ய முடியும். அப்படித்தான் அரசியல் கட்சியாக இயங்குகிறார்கள். அப்போது பெரியார் சொன்னார் ஒருவன் மனைவியை அடித்துக் கொண்டே இருந்தானாம். ஏன் அடிக்கிறாய் என்று கேட்டதற்கு அன்பாக இருக்கமாட்டேன் என்கிறாள். எனவே அடிக்கிறேன் என்றானாம். அடித்துக் கொண்டே அன்பாக இரு என்றால் அன்பாக இருப்பாளா? அது போல அப்படித்தான், மத்திய அரசு பிரிந்து போகாதே, பிரிந்து போகாதே என்று நம்மை அடித்துக் கொண்டே இருக்கிறது. எவ்வளவு நாளைக்கு இந்தக் கணவனிடம் அந்த மனைவி தான் குடும்பம் நடத்துவாள் என்று சொன்னார். அதைபோல இவர்கள் எல்லோரிடமும் சொல்கிறார்கள் சமூக நல்லிணக்கம் என்று.

அதோடு நிறுத்தி விட்டார்கள் என்று நினைக்காதீர்கள். மோடி போன ஆட்சிக் காலத்தில் ஒரு புத்தகம் எழுதினார். புத்தகத்தின் பெயரே 'சமாஜிக் சமரஸ்தா' (சமூக நல்லிணக்கம்) என்பதுதான். அதில்ஒருசெய்தியைஎழுதுகிறார்அயோத்திஇராமர்கோவிலுக்கு அடிக்கல் நாட்டியது யார் தெரியுமா? பீகாரில் இருந்து ஒரு தலித். உண்மையில் அவர் கூட செய்யவில்லை. அந்த மாவட்டத்தின் அமைப்பாளரை அவசரமாகக் கூப்பிட்டு அன்றைக்கு வந்து கல்லை வைக்கச் சொல்லி அனுப்பி விட்டார்கள். அவர்கள் பிரச்சனை செய்வான் என்று பயந்துகொண்டு அருகே ஆளை நிற்க வைத்து கவனிக்க வைத்திருந்தார்கள். கல்லெடுக்காமல் தடுத்து வைத்திருந்தவனைத் தான் அழைத்து கல்லை வைக்கச் சொன்னார்கள். அவன்தான்மாநிலப்பொறுப்பாளர். பழங்குடிகள் தாழ்த்தப்பட்டோர் பிரிவில் ஆர்எஸ்எஸ் பிரச்சாரகர். அதை எழுதுகிறார்கள், நாங்கள் எல்லாம் தலித்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறோம். எங்கள் இராமர் கோவிலுக்கே அடிக்கல் நாட்டியவர் தலித் என்பதுபோல. அந்தக்கல் இப்போது அங்கே இருக்கிறதாவென்று தெரியாது நமக்கு. அதை இவர் புத்தகத்தில் எழுதினார்

இதோடு மட்டும் இல்லை தோழர்களே! தேசியக் கல்விக் கொள்கை என்ற ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தக் கல்விக்குழுத் தலைவர் கஸ்தூரிரங்கன்; அவர் கல்வியாளர் கிடையாது. காங்கிரஸ்தான் விவரம் தெரியாமல் கல்வியாளர்களைப் போட்டுக் கல்விக்குழுக்கள் அமைத்தார்கள்; இவர்கள் ரொம்ப விவரமானவர்கள். வாஜ்பாயி அமைத்தது அம்பானி - பிர்லா கல்விக்குழு. அவர்கள்தான் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் வரலாம் என்று சொன்னவர்கள். பல்கலைக் கழகங்களில், கல்லூரிகளில், கல்வி நிலையங்களில் அரசியல் நடவடிக்கையைத் தடை செய்யவேண்டும் என்று சொன்னார்கள். இப்போது தான் ஜேஎன்யூ, ஜாமியா யுனிவர்சிட்டி எல்லாம் போய் இருக்கிறான். இது எல்லாம் அவர்கள் கொடுத்த ஆலோசனைகள் தான். அடுத்து முந்தைய மோடி ஆட்சியில் யார் அறிக்கை கொடுத்தார்கள். டி.எஸ்.ஆர்.சுப்பிரமணியம், ஒரு அமைச்சரவை செயலாளர். ஒரு கல்விக்குழு தலைவர். இப்போது யாரென்றால் இஸ்ரோ விஞ்ஞானியாம் அவர் கல்விக்குழு தலைவர். அவர்தான் சொன்னதை எழுதுவார். கல்வியாளர் என்றால் சொந்தமாக எழுதிவிடுவார், எனவே அப்படிப்பட்ட கல்வியாளர்களை அவர்கள் வைத்துக்கொண்டதில்லை.

கஸ்தூரிரங்கன் முன்னுரையில் ஒன்று எழுதியிருக்கிறார் இந்தநாடு நாசமாகப் போனதற்கு என்ன காரணம் என்றால் ஒருதப்பைத் தொடர்ந்து செய்துகொண்டே இருந்துவிட்டோம். காலங்காலமாக, விடுதலை பெற்ற காலத்திலிருந்து நாம்தான் சொல்லித் தந்தோம். எல்லோருக்கும் கல்வி; எல்லாருக்கும் வாய்ப்பு, அப்படித்தான் சொல்லிக்கொண்டே வந்துவிட்டோம். நாம் ஒரு வாய்ப்பு கேடாக தரமான கல்வி என்பதைக் கைவிட்டு விட்டோம், சமமான கல்வியில், சமச்சீர் கல்வி என்றும் எல்லோருக்கும் கல்வி என்றும் பேசி நாசமாகப் போய்விட்டோம். அப்படியெல்லாம் கூடாது; நாலுபேருக்கு நல்லவனாகப் பார்த்து, அவனுக்கு மட்டும் சிறந்த கல்வியைக் கொடு. அப்படி மீண்டும் வேத காலத்துக்குப் போவது. கல்வி கற்பதற்கு ஒரு கூட்டம்; கல்வி கற்று, வேலையில் இருப்பதற்கு ஒரு கூட்டம் என்று இருக்கும். கேரளாவில் இருந்த புலையர் சங்கப் பேரவையை நிறுவிய அய்யங்காளி என்பவர் ஒரு பெரிய புரட்சிக்காரர். தெருவில் சவாரி வண்டியில் போகக் கூடாது என்று சொன்னபோது வண்டியில் தானடா போவேன் என்றார்; காளை மாட்டுக்குக் கொம்பில் சலங்கை கட்டக் கூடாது என்றபோது சலங்கைக் கட்டிக் கொண்டு தான் போவேன், சட்டை போடக் கூடாது என்ற போது சட்டை போட்டுக் கொண்டுதான் தான்

போவேன் என்றார். தடுத்தவர்களை இறங்கி அடித்தார் அய்யன்காளி. அமெரிக்காவில் மால்கம் எக்ஸ் மாதிரி இங்கே இவர்.

அவருக்கானபிறந்தநாள்விழாவில்மோடிகலந்துகொண்டார், அங்கே பேசினார். 8.9.2014-இல் பத்திரிக்கையில் வந்தது. ‘சமத்துவத்தை எல்லாம் பேசாதீர்கள். சமூக நல்லிணக்கத்திற்கு நாம் எல்லோரும் சேர்ந்து பணியாற்றவேண்டும், சமத்துவம் பேசாதீர்கள், அதெல்லாம் சிரமம் அதையே பேசிப்பேசி ஏன் வீணாய்ப் போகிறீர்கள், இனிமேல் இருப்பது அப்படியே இருக்கட்டும் அதிலேயே வாழ்வோம்‘. இந்தக் கருத்துக் கொண்டவர்கள்தான் இந்த சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள்.

இந்தச் சட்டம் என்ன என்பதை மட்டும் கொஞ்சம் சொல்லி விடுகிறேன். மூன்று சட்டங்கள்தான் இப்போது பேசவேண்டியதாக இருக்கிறது. திருத்தம் கொண்டு வரப்பட்டது என்னவோ குடியுரிமைத் திருத்தச் சட்டம் என்ற ஒன்றுதான். மோடிதான் முதலில் என்று சொல்லக் கூடாது; இதற்கு முன்பே சிலவற்றை செய்து வைத்திருந்தார்கள், மறந்து விடக்கூடாது. ‘ஜெண்டில்மேன் பொலிட்டீசியன்’ என்று சொல்லப்பட்ட வாஜ்பாயி காலத்திலும் செய்திருக்கிறார். 1987-இல் அஸ்ஸாம் சிக்கல் வந்து அதற்காக ஒரு திருத்தச் சட்டம் வருகிற வரைக்கும் இந்தியாவில் இருக்கின்ற எல்லாருக்கும் குடியுரிமை உண்டு என்றுதான் இருந்தது.

இந்த நாட்டில் பிறந்து இருக்கவேண்டும்; அல்லது இந்த நாட்டின் ஒருவருக்கு வாரிசாக இருக்கவேண்டும்; அல்லது நீண்டகாலமாக வாழ்ந்திருக்க வேண்டும். அல்லது இந்தியா இணைத்துக்கொண்ட நாட்டில் இருக்கிற குடிமக்கள், எடுத்துக்காட்டாக, கோவாவை, புதுச்சேரியை நம்மோடு சேர்த்துக் கொண்டோம்; அவர்களும் இந்தியக் குடிமக்கள்தான். அதற்கு முன்னாள் வரைக்கும் இவ்வளவுதான் அந்தச் சட்டம் சொல்லியது. அஸ்ஸாம் சிக்கல் வந்ததை ஒட்டித்தான் வாஜ்பாயி காலத்தில் ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். அதற்கு முன்னர் 01.07.1987 வரைக்கும் இந்தியாவில் பிறந்த அனைவரும் இந்திய குடிமக்கள்தான். இந்தியாவில் வாழ்கிற, பிறந்த எல்லோரும் இந்திய குடிமக்கள்தான். 1987-இல் குடியுரிமைச் சட்டம் வந்த போதுதான், ஒரு சின்னத் திருத்தம் கொண்டு வந்தார்கள். பெற்றோரில் ஒருவர் இந்தியராக இருக்கவேண்டும். எல்லாரும் வெளியிலிருந்து நேராக வந்துவிடக்கூடாது. ஒருவர் இந்தியராக

இருக்க வேண்டும். என்ன நினைக்கிறான்? வங்கதேசத்தில் போர் வந்தது. 1971-இல் போராட்டம் அதற்குப் பின்னால் ஒப்பந்தம். ஒப்பந்தத்தை ஒட்டி ஒரு சட்டத் திருத்தம். 1987 வரைக்கும் பிறந்தவர்கள் இருந்தால் பெற்றோரில் ஒருவர் இந்தியராக இருந்தாலும் உனக்குக் குடியுரிமை உண்டு. திரும்பவும் ஒரு திருத்தம், 2003-இல் வாஜ்பாய் காலத்தில்தான் வந்தது. அவர் கொண்டுவந்த சட்டத் திருத்தம், பெற்றோரில் இருவரும் இந்தியர்களாக இருக்க வேண்டும், ஒருத்தர் இங்கே வந்து குடியேறியிருந்தவராக இருந்தால் சட்ட விரோதமாக குடியேறியவராக இருக்கக்கூடாது.

அப்படி எனில் இந்த நாட்டுக்காரன் தான் அவன். அவர் போட்ட 2004 இருந்து, இதற்கு ஒவ்வொன்றுக்கும் இப்படி மாற்றி மாற்றிக் கொண்டுவந்தார்கள். இதற்கு ஒரு பட்டியல் எடுக்க வேண்டும் என்றான். ஏற்கனவே, இங்கு இருப்பவர்களுக்கு என்ன செய்வது? நீண்டகாலமாகக் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னசெய்வது? திபெத்திலிருந்து வந்தவர்கள் இங்கே குடியிருக்கிறார்கள், இலங்கையிலிருந்து வந்திருக்கிறார்கள், அந்தக் காலத்திலிருந்து யூதர்கள் வந்திருக்கிறார்கள், யூதர்கள் போய் விட்டார்கள். பாலஸ்தீனத்திலிருந்து வந்தவர்கள் இருக்கிறார்கள். பல்வேறு மக்கள் இருக்கிறார்கள். அதற்கான ஒரு திருத்தச் சட்டத்தைத்தான் இப்போதும் கொண்டு வந்திருக்கிறார்கள்.

யாரெல்லாம் இந்திய குடிமக்கள்? சட்ட விரோதமாக வந்து குடியேறியவர்களை என்ன செய்வது என்பதை ஆராய்வது தான் இந்தச்சட்டம்2016-இலேயே கொண்டு வந்து மாநிலங்களவையில் நிறைவேற்ற முடியாமல் அமைதியாக விட்டுவிட்டுப்போய் விட்டார்கள். அப்போது ஒன்றை மட்டும் செய்துகொண்டார்கள்; நடைமுறை ஆணையாக ஒன்றைப் போட்டார்கள். அயல் நாட்டுக்காரர்களைப் பற்றிய ஒரு சட்டத்தில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். இந்த நாட்டுக்குப் பாஸ்போர்ட் இல்லாமல் வருபவர்கள் எல்லோர் மீதும் வழக்கு போட்டு விடுவார்கள். ஆனால் மதக்கொடுமையால், இந்த நாட்டுக்கு வந்தவர்களுக்கு அந்தச் சட்டம் பொருந்தாது என்று சொல்லி விட்டார்கள். அவர்களைக் கைது செய்ய வேண்டும், அப்போதே இதில் ஏறக்குறைய அந்த வரியைச் சொல்லிவிட்டார்கள். இந்தச் சட்டத்தில் இல்லை; இப்போது சட்டத்திருத்தத்தில் சொல்லியிருக்கிறார்கள், அங்கிருந்து வந்தவர்களில் யார் யாரை வைத்துக் கொள்ளவேண்டும் என்று எழுதிவிட்டார்கள்.

அவ்வாறு வந்தவர்களில் மூன்று நாடுகளைச் சொல்லி இருக்கிறார்கள். நாடுகள் என்றால் நாம் மூன்று நாடுகளைக் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும். அண்டைநாடு எனில் பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், அங்கு இருந்து வந்தவர்களுக்குக் குடியுரிமையைப் பற்றிப் பேசுகிறது இந்த திருத்தச் சட்டம். வந்தவர்களில் இந்துக்கள், சீக்கியர்கள், பவுத்தர்கள், கிறிஸ்தவர்கள், பார்சிகள் என்ற ஆறு பேரைப் பற்றிப் பேசுகிறார்கள். அவர்களுக்கு குடியுரிமை உண்டு என்று சொல்கிறார்கள். அதற்கு அந்தச் சட்டத்தில் சொல்கிறார்கள் மதக் கொடுமையால் இங்குவந்தவர்கள் என்று பேசுகிறார்கள். சட்டத்தில் எங்கேயும் அந்த சொற்றொடர் இல்லை இவர்கள் பேசிக் கொள்கிறார்கள். ஆனால் சட்டத் திருத்தத்தில் அந்த வரி இல்லாமல்தான் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதுதான் அவர்களது திறமை; பழைய இந்தியா என்று சொல்கிறான், பழைய இந்தியாவில் ஆப்கானிஸ்தான் எங்கே இருந்தது? எப்போது அது இந்தியாவோடு இருந்தது? எப்போதும் தனி நாடுதானே! நமக்கு நடுவில் இன்னொரு நாடு அதற்குப் பின்னால்தானே ஆப்கானிஸ்தான் இருக்கிறது; சத்தமாகப் பேசினால் உண்மை என்று எண்ணிவிடுவார்கள் என எண்ணிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இதில் ஆறு பிழைகளைப் பற்றி நமது தோழர்கள் சொன்னார்கள்; இதில் வந்தவர்கள் எவ்வளவு பேர்என்று சொல்ல வேண்டும். இவன் நிறையக் கொடுக்கிறான்; நல்ல மனத்தோடு கொடுக்கிறான்; கிறிஸ்தவர்களுக்குக் கூட கொடுக்கிறான்; பரவாயில்லையே என்று நாம் நினைத்துக் கொள்ளக் கூடாது, மகிழ்ச்சியடையக் கூடாது. அவன் கணக்குப்படி மொத்தம் வந்திருப்பவர்கள் 31,313 பேர். ஐ.பி. கணக்கொன்று கொடுத்து இருக்கிறது. அதில் பார்சிகள் இரண்டு பேர் பௌத்தர்கள் இரண்டு பேர் கிறிஸ்தவர்கள் 55 என்றான், இப்போது 16 என்று சொல்லி கொண்டு இருக்கிறான். இந்த எண்ணிக்கையில் உள்ளவர்களுக்குத்தான் குடியுரிமை தருகிறானாம். அதிலும் கிறிஸ்தவர்களைப் பற்றி இன்னும் சரியாகச் சொல்ல முடியவில்லை. 16 கூட இருக்குமா இல்லை 1.6 என்று இருக்குமா என்றுகூடத் தெரியவில்லை. அடுத்து இந்துக்கள்25,447பேர்; சீக்கியர்கள்5,807பேர்; இவர்களுக்குத்தான் குடியுரிமை உண்டு என்று சொல்லுகிறார்கள். அப்படி இந்தச் சட்டம் எதெதற்கு விரோதமாக இருக்கிறது என்பதைத்தான் இப்போது எல்லோரும் சட்டப் பூர்வமாகப் பேசுகிறார்கள்.

நாம் என்ன சொல்கிறோம் நாடு எனில் பக்கத்து நாடு என்று சொல்லமுடியாது; எல்லை நாடுகள் இருக்கின்றன.

அது எல்லையோடு ஒட்டிகொண்டு இருக்கிற நாடுகள். ஆம், பங்களாதேஷ், பாகிஸ்தான் இருக்கிறது உண்மைதான். ஆனால் ஆப்கானிஸ்தான் இல்லை. அண்டை நாடுகள் என்று சொன்னால் நமக்கு அடுத்த நாடு, கடல் நடுவில் இருக்கிறது. இலங்கை மலேசியா ஆகிய நாடுகள். அயல் நாடு என்றால் தள்ளி எங்கேயாவது இருப்பது. ஆப்கானிஸ்தான் அயல் நாடு; எல்லை நாடும் இல்லை; அண்டை நாடும் இல்லை; அயல் நாடாக இருக்கிறது. அதை இதில் சேர்க்கிறான். இதில் பாதிக்கப்பட்ட கொடுமைக்கு உள்ளான சிறுபான்மையினர் என்று சொன்னால் சீனா நம்முடைய எல்லை நாடு, நேபாளம் எல்லை நாடு, பூட்டான் எல்லை நாடு, மியான்மர் எல்லை நாடு, சேர்ந்து இருக்கிற நாடுகள். சீனாவை விட்டு விடலாம். அது திபெத் நடுவில் தடுத்துக் கொண்டு இருக்கிறதென்று சொல்வான்.

பூட்டானிலொரு புத்த மதம் இருக்கிறது. ஒரு செய்தி எனக்கு இப்போது நினைத்தாலும் வியப்பாக இருக்கும். 1982-இன் இறுதியில்தான் எனக்கு விடுதலைப் புலிகளின் அறிமுகம் கிடைக்கிறது; வீட்டுக்கு வருகிறார்கள் இளைஞர்கள். எங்கள் வீட்டில் பெரியார் படம் ஒன்று இருக்கிறது, புத்தர் படம் ஒன்று இருக்கிறது. பார்த்த உடனே என்ன புத்தர் படத்தை வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டார்கள்; நான் சிரித்துக் கொண்டே சொன்னேன், எங்கள் ஊர் புத்தர் நல்லவர்; உங்க ஊர் புத்தர்தான் கெட்டவர் என்று. பூடானில் 'வஜ்ராயன புத்த மதம்' என்று ஒன்று இருக்கிறது. அங்கு இருக்கிற கிறிஸ்துவர்கள் பொதுவெளியில் பைபிளைக்கூட எடுத்துச் செல்ல முடியாது; வீட்டுக்குள்தான் வழிபாடு செய்துகொள்ள வேண்டும். மாதா கோவிலுக்குச் செல்ல அங்கிருந்து இந்தியாவிற்குள் வந்து கிறிஸ்துமஸுக்கு, ஈஸ்டருக்கு, திருவிழாக்களுக்கு வழிபாடு செய்துவிட்டு திரும்பப் போய்விடலாம். அந்தநாட்டில் வழிபாடு செய்ய முடியாது. அவர்களைச் சேர்த்திருக்கலாமே! ஏன் அவர்களை சேர்க்கவில்லை? இங்கே கிறிஸ்தவர்களைச் சேர்த்தீர்களே? சரி இந்துக்களை சேர்த்தீர்கள்; இலங்கையிலிருந்து வந்த இந்துக்கள் நிறைய பேர் இங்கே இருக்கிறார்களே; ஈழத்துத் தலைவர்கள் காவி ஆனந்தன் என்றுகூட சொல்லிக் கொண்டிருக்கிறார்களே, அவர்களை ஏன் விட்டுவிட்டீர்கள்? அவர்களைப் பொருத்தவரை மோசமான ரோக் ஸ்டேட்ஸ் என்று சொல்லுவார்கள். அது போல மோசமான நாடுகள் முஸ்லிம்கள் இருக்கிற நாடுகள்தான். ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், வங்கதேசம் ஆகிய மூன்றும் இஸ்லாமிய நாடுகள்.

பேராசிரியர் மார்க்ஸ் ‘இஸ்லாமியர்களுக்கு எதிரான கட்டுக்கதைகள்’ என்ற நூலில் எழுதுவார், வரலாற்றுப் பாடத்தில் என்ன எழுதி வைத்திருக்கிறாய்? ஆரியர் வருகை என்றும், இஸ்லாமியர் படையெடுப்பு என்றும் எழுதியிருக்கிறாய். ஆரியர்களுக்கு நாங்கள் என்ன வெற்றிலை பாக்கு வைத்தா வரவேற்று அழைத்து வந்தோம்? ஆரியர் படையெடுப்பு, இஸ்லாமியர் படையெடுப்பு என்று எழுத வேண்டும் அல்லது ஆரியர் வருகை, இஸ்லாமியர் வருகை என்று எழுத வேண்டும். ஆனால் ஆரியர் வருகை என்றும் இஸ்லாமியர் படையெடுப்பு என்றும் படிக்கும்போதே நம் மனதில் இஸ்லாமியர்களுக்கு எதிரான வன்மத்தை நுழைத்துவிடுகிறார்கள். அதைப் போலத்தான் இந்த மூன்று நாடுகளைப் பற்றிச் சொல்கிறார்கள், அதே எண்ணம்தான் இதற்குள்ளும் ஒளிந்திருக்கிறது. கொஞ்ச நாளில் அது மெல்ல வளரும். ஊட்டி விடுவார்கள். இப்படி முயற்சிகள் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கின்றன. மியான்மரிலிருந்து ரோஹிங்கிய முஸ்லிம்களைப் பாதிக்கப்பட்டவர்களாக சேர்த்துக்கொள்ள முடியாது: பூட்டான் கிறிஸ்துவர்களைச் சேர்த்துக் கொள்ள மாட்டோம்; அந்த ஊரைச் சேர்ந்த முஸ்லிம் பாதிக்கப்பட்டாலும் சேர்த்துக் கொள்ள மாட்டோம். இப்படி ஒரு சட்டம்.

அடுத்து NPR பற்றிப் பார்ப்போம். நேஷனல் பாப்புலேஷன் ரெஜிஸ்டர், தேசிய மக்கள் பதிவேடு இருக்கிறது. அதனை ஏற்கனவே எடுத்து இருக்கிறார்கள் 2005, 2008களில் எடுத்தார்கள்; அவை பேருக்கு எடுக்கப்பட்டவை. இப்போது அழுத்தமாகச் சில விதிகளின் அடிப்படையில் இப்போது எடுக்கிறார்கள். இவை ஒவ்வொன்றும் சேர்ந்திருக்கின்றன, தொடர்போடு இருக்கின்றன என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். இந்தச் சட்டம் வேறு; அது வேறு அல்ல. முதலில் என்பிஆர் என்று கணக்கெடுப்பான்; அது மக்களைப் பற்றிய பொதுவான கணக்கெடுப்பு என்பதுபோல் இருக்கிறது; ஆனால் அதில் ஒரு சூச்சுமத்தை வைத்திருக்கிறார்கள். சென்சஸ் தலைமை அதிகாரி தான் எடுக்கிறார் சென்சஸ்; அவர்தான் குடிமக்கள் பதிவேட்டுக்கும் அவர்தான் தலைமை அதிகாரி. ஆனால் மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் சொல்வதை எழுதிக் கொள்ளவேண்டும், அதுதான் விதி. என்ன மதம், என்ன ஜாதி, என்ன வருமானம் என்பவற்றை எல்லாம் சொல்வதை எழுதிக் கொள்ளவேண்டும். எடுத்துக்காட்டாக எம்.ஜி.ஆரிடம் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அதிகாரி கணக்கெடுத்தபோது, என்ன மதம் என்று கேட்டதற்கு அவர் ‘திராவிட மதம்’ என்று கூறினார்.

அப்படி ஒரு மதம் இருக்கிறதா என்று கேட்காமல் திராவிட மதம் என்று பதிந்துகொண்டார். ஆனால், தேசிய மக்கள் பதிவேட்டுக் கணக்கெடுப்பின்போது அவ்வாறு சொல்லமுடியாது. சரியான, முழுமையான, விவரங்களை மட்டும்தான் சொல்ல வேண்டும்; இல்லையென்றால் உங்கள் மீது குற்ற நடவடிக்கை எடுக்கலாம்; பொய்யாகஇருந்தால்வழக்கு,சிறை,அபராதம்உண்டுஎன்றசட்ட விதிகள் இருக்கின்றன. சரி எடுக்கிறார்; இது தனி, அது தனி என்று இல்லை. தேசியக் குடிமக்கள் பதிவேட்டிற்கான விவரங்களை எடுக்கிறார்கள். அதில் கொஞ்சம் சந்தேகமானவர்களைத் தனியாக குறிப்பெழுதி வைத்து விடுவார்கள்; அவ்வாறு குறிப்பு எழுதிவைத்து, அவற்றை அயல்நாட்டினர் துறைக்கு அனுப்பி, அவர்கள் மீண்டும் ஒருமுறை விசாரிப்பார்கள். அப்போதுதான் சான்றுகள் கேட்பார்கள்

***அது நீ எங்கே பிறந்தாய்? எந்த மருத்துவமனையில்?***

***இல்லைங்க எங்கம்மா வயலில் பயிர் நட போனபோது அங்கேயே பொறந்துட்டேன்!***

***அதுக்கு ஏதாவது சான்று வச்சிருக்கியா?***

***தோட்டத்துக்காரன் கொடுக்கல (சான்றிதழ் வேறென்ன இருக்கமுடியும்?***

***இல்லை சரி உங்க அப்பா?***

***எங்க அப்பா இன்னார்; அப்பா இங்கதான் குடியிருந்தார்.***

***வீட்டுப் பத்திரம் இருக்கா?***

**இல்லை, ஓடையோரமா புறம்போக்கு நிலத்தில் குடிசை போட்டுக் குடியிருந்தோம், ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் பெய்த பெருமழை வெள்ளத்தின் போது குடிசையை வெள்ளம் அடித்துக் கொண்டு போய்விட்டது. இப்போது வெள்ள நிவாரண முகாமில் உள்ளோம்.**

***சரி, தாத்தா வைத்திருக்கிறாரா சான்றிதழ்? இங்கு குடியிருந்ததற்கு வேறு ஆதாரம் இருக்கிறதா?***

இதையெல்லாம் விசாரிக்க அதிகாரி வருவார். அவர் ஜுடிசியலா பயிற்சி பெற்றவர் இல்லை. அவர் ஒரு அலுவலர், அவ்வளவுதான். விசாரிக்கும்போது இன்னொன்று சொல்கிறார்கள். அவரவர்தான் தன்னை இன்னார் என்று

மெய்ப்பித்துக் கொள்ளவேண்டும், மெய்ப்பித்து நான்தான் என்று உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். ஆனால், அது சட்டத்தில் வேறு ஒருவழிவகையை வைத்திருக்கிறார்கள். எவரொருவர் வேண்டுமானாலும் இவர்மீது எனக்கு சந்தேகம் இருக்கிறது என்றோ, இன்னார் கொடுத்துள்ள ஆதாரம் பொய்யானது என்றோ மனுதாக்கல் செய்யலாம். ஆமாம், ஆர்எஸ்எஸ்காரன் பார்த்துக்கொண்டே இருப்பான். இதோ பாய் போறாரு, அவரிடம் சான்றிதழைக் கேட்கச் சொல்லுங்கள். அவரிடம் அதெல்லாம் கிடையாது என்று சொல்லமுடியும். இந்தியக் குடிமகனாக இருந்தாலும் குடியுரிமைப் பதிவேட்டில் இருந்து நீக்குவதற்கு, குடியுரிமையை இழப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். இந்திய குடிமக்கள் யாரும் பயப்படவேண்டாம்; இந்திய முஸ்லீம்கள் யாரும் பயப்படவேண்டாம் என்று சொல்கிறார்கள். மக்கள் தொகையைப் பதிவு செய்கிறீர்கள். பிறகு அதைக் குடிமக்கள் பதிவேட்டுக்கு மாற்றுகிறீர்கள். வெறும் மக்கள் அதற்கப்புறம் குடிமக்கள் ஆகிறார்கள். இடையில் சந்தேகப்பட்டால் நிறுத்தி வைத்து விசாரிக்கிறீர்கள். விசாரித்து சரி என்ற பிறகு குடிமக்கள் பதிவேட்டில் வைத்துக் கொள்ளவேண்டும் அல்லவா. அதை மறுப்பதற்கு ஒருவர் மனு கொடுக்கலாம் 6.1 என்று ஒருபிரிவு இருக்கிறது. அதில், இல்லை, இவர் உண்மையான குடிமகன்/ள் இல்லை என்று புகார் சொல்லுவார். திரும்பவும் இன்னும் இரண்டு சான்றிதழ்களைக் கேட்பார். இது சரியில்லை இன்னொன்று கொடு என்பார். யார் யாரெல்லாம் என்று நினைத்தீர்கள் தோழர்களே,

கட்டிடத் தொழிலாளர்கள் அவர்கள் இந்துக்களாகக்கூட இருக்கலாம். கட்டிடத் தொழிலாளர் இங்கே மூன்று மாதம் இருப்பார், தொடர்ச்சியாக ஓரிடத்தில் ஆறுமாதம் வசித்திருக்கவேண்டும். தேசிய மக்கள் பதிவேட்டில் பதிய விதிகளின்படி தொடர்ச்சியாக ஒருவர் ஆறுமாதம் குடியிருந்திருக்க வேண்டும். மேலும் ஆறுமாதம் அங்கு இருப்பதற்கான விருப்பத்தோடு இருக்கவேண்டும். அவர்களை மட்டும்தான் மக்கள் பதிவேட்டில் எழுதிக் கொள்வார்கள். இங்கு இருக்கின்ற கட்டிடத் தொழிலாளர்கள் தொடர்ந்து அங்கு ஆறு மாதம் குடியிருந்திருக்க மாட்டார்கள்; இன்னும் ஆறு மாதம் அங்கேயே இருக்க முடியாது. அவர்கள் எங்கெங்கோ போவார்கள், எங்கள் ஊர்ப்பக்கம் கரும்பு வெட்ட ஒரு குழுவாக இருப்பார்கள், மஞ்சள் வெட்ட ஒரு குழுவினர் வருவார்கள். ஈரோட்டில் வெட்டுவார்கள் திரும்பி இங்கே

வருவார்கள், திரும்பவும் கொடுமுடி போவார்கள்; கர்நாடகா போவர்கள். ஆறுமாதம் வேண்டுமானால் அவர்கள் வீட்டில் இருக்கலாம், மறுபடியும் இன்னொரு ஆறுமாதம் அங்கேயே இருக்கமட்டார்கள். அவர்கள் வராமல்கூட போய்விடுவார்கள். அதைப்பற்றியும் புகார் அளிக்கமுடியும், அது இந்துக்களுக்கும் நடக்கும்; ஆகாத யாருக்கும் நடக்கும். இந்த ஆபத்து உள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

அப்புறம்தான் என்ஆர்சி இந்த இரண்டுக்கும் உள்ள வேறுபாடு இதுதான்; சென்சஸ் கணக்கெடுப்பில் எதை வேண்டுமானாலும் சொல்லலாம். இதில் உள்ளதை மட்டும்தான் சொல்லவேண்டும், தவறாக சொன்னால் தண்டனை உண்டு; ஆறுமாத சிறைதண்டனை கூட உண்டு. இது எல்லாம் வைத்துக் கொண்டு நம்மிடம் மட்டும் இல்லை என்று சொன்னால் எப்படி என்று நான் கேட்கிறேன்.

வாஜ்பாய்தான், அந்த நல்லவர் தான், எல்லாவற்றையும் தொடங்கி வைத்திருக்கிறார். சங்கராச்சாரி பற்றி சொல்வார்கள், அவர் ரொம்ப ரொம்ப நல்லவருங்க என்பது மாதிரி. அவர் மூன்று சொற்களைச் சொன்னார், அந்த அறிக்கையில் இந்தத் தவறான குடிமக்களை *Detection* செய்வோம், அப்புறம் *Deletion* செய்வோம், பின்னர்*Deportation* செய்வோம் என்றார். அதெல்லாம் மூன்று *D* எழுத்துகள். முன்பெல்லாம் சூலாயுதத்தின் மூன்று முனைகள் பற்றி இந்துத்துவாதிகள் சொன்னார்கள், ஒருமுனை கிறிஸ்தவனுக்கு, ஒருமுனை இஸ்லாமியனுக்கு, அடுத்தது மதச்சார்பின்மை பேசுபவருக்கு என்றார்கள்.

2014-இல் மோடி ஆட்சிக்கு வந்தபின்னர் 2014 டிசம்பரில் *World Hindu Congress* நடந்தது; உலக இந்துக்கள் மாநாடு நடந்தது. அசோக் சிங்கால் தலைமையில் நடந்தது. அதில் ஐந்து எதிரிகளை வடிவமைத்திருக்கிறார்கள்; 5M, (Malicious 5) கெட்ட ஐந்து விதிகள். அவை முதலில் மார்க்சிஸ்ட்கள், அடுத்தது மெக்காலேயிஸ்ட், இந்த படித்தவர்கள் எங்களுக்கு ஆகாது, எங்கள் இந்து கல்வியைப் படி, வெளிநாட்டுக் கல்வியைக் கற்றவர்கள் இருக்கக் கூடாது, அறிவியல் படித்தவன் கூடாது; அடுத்தவர்கள் மெட்டீரியலிஸ்ட்கள், ஐந்தாவது முஸ்லீம்கள், மதச்சார்பின்மையை இரண்டாக பிரித்துவிட்டார்கள், மார்க்சிஸ்ட்கள் தனியாக, மெட்டீரியலிஸ்ட்கள் தனியாக; ஐந்தாவதாக முஸ்லிம்கள். இதில் இன்னொன்று சொல்லியிருக்கிறார்கள், நான்காவதாக

இருப்பவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள் என்று வைத்திருக்கிறார்கள். நாத்திகர்களைப் பற்றி எழுதி இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனால்தானோ என்னவோ வங்க தேச முஸ்லிம்களும் முன்னாலேயே சில நாத்திகர்களைக் கொன்றுவிட்டார்கள். அதற்கப்புறம் தஸ்லிமா நஸ்ரின் அவர்கள் இங்கே வந்துவிட்டார்கள்; கொல்லப்பட்டவர்களில் இந்துக்களும் உண்டு, இஸ்லாமியர்களும் உண்டு. குடியுரிமைத் திருத்த சட்டத்தில் நாத்திகர்களையும் சேர்த்து இருந்தால் நன்றாக இருந்திருக்கும்தான். நாங்கள் எல்லாம் இந்த மூன்று நாடுகளிலிருந்து தப்பி வந்தால் எங்களுக்கு குடியுரிமை கிடைக்குமே என்று இதைச் சொல்கிறேன்; இவர்கள் எப்படி சேர்ப்பார்கள், இவர்கள்தான் ஏற்கனவே கல்புர்க்கி, கோவிந்த் பன்சாரே, கவுரி லங்கேஷ் ஆகியோரைக் கொன்றவர்கள் ஆயிற்றே!

இவர்களது இந்துத்துவவாதிகளின் பித்தலாட்டங்களைப் பற்றியும் சொல்லிவிடவேண்டும். 2019 தேர்தல் பரப்புரையின் போது நாங்கள் ஆட்சிக்கு வந்தால் எங்கள் அரசு குடிமக்கள் பதிவேட்டை இந்தியாவின் பிற பகுதிகளுக்கும் கொண்டுவரும்; அதன் தொடர்ச்சியாகக் குடியுரிமை திருத்தச் சட்டத்தையும் செய்யும் என்று அமித்ஷா எல்லா இடங்களிலும் பேசினார். இப்போது பிரச்சனை வந்த பிறகு, மோடி 22-ஆம் தேதி சொல்லியிருக்கிறார்; இல்லை, இல்லை, அப்படி எல்லாம் எங்களுக்கு ஒரு திட்டமே கிடையாது என. தேர்தல் பிரச்சாரத்தில் பேசிவிட்டு போராட்டம் அதிகமான பிறகு அப்படி ஒரு திட்டமே இல்லை என்று மோடி சொல்கிறார். இதனால்தான் இவர்கள் எதைச் சொன்னாலும் நம்மால் நம்ப முடியவில்லை. இரண்டும் இரண்டும் நான்கு என்று அவர்கள் சொன்னால் விரல் விட்டு எண்ணிய பின்னர்தான் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படித்தான் எல்லாவற்றையும் மாற்றி மாற்றிப் பேசுகிறர்கள்.

அரசியல்சட்டம் 14 இக்கு எதிராக இருந்தால் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதைத்தான் நாம் சொல்கிறோம். அரசியல் சட்டத்தில் எதை வேண்டுமானாலும் திருத்த முடியாது என்பதற்கு சில உதாரணங்களைச் சொல்லவேண்டும். ஒரு சாமியார் என்மேல் ஒன்றும் செய்யமுடியாது என்று கூறினார், நித்தியானந்தா போன்ற ஒரு சாமியார், கேசவானந்த பாரதி என்ற ஒருவர் கேரளாவில் சொன்னார். அப்போதெல்லாம் விசாரித்து மதச் சட்டத்தில் தலையிடக்கூடாது என்ற ஒரு தீர்ப்புவந்தது. அதோடு மட்டும் இல்லை, அது நமக்குப் பிடிக்காமல்

இருக்கலாம், இன்னொன்றையும் சொன்னார்கள், அரசியல் அமைப்புதான் உயர்வானது. அதற்கு மேல் இன்னொன்று கிடையாது. அடுத்து, இந்த நாட்டினுடைய கூட்டாட்சி என்பது உறுதியானது. மதச்சார்பின்மை என்பதை எந்த சட்டத்தினாலும் திருத்தமுடியாது, 368 அய் வைத்துக் கொண்டு எதை வேண்டுமானாலும் திருத்திவிடமுடியாது. இந்த நாட்டில் கூட்டாட்சி என்பதை ஒருபோதும் மாற்றமுடியாது, அடிப்படை உரிமைகள் எதையும் மாற்றமுடியாது. அதை வைத்துத்தான் இந்தக் குடியுரிமை திருத்தச் சட்டத்தை நாம் மறுக்கிறோம். இந்தியாவில் அடிப்படை சட்டம் என்பதில் சிலச் சட்டம் மட்டும்தான், மக்கள் என்று பேசுகிறது. யாராக இருந்தாலும் அந்த 14 என்பது அதைப் பற்றித்தான் பேசும், the state shall not deny any person equality before law. Any citizen என்று சொல்லும். இந்த நாட்டு மக்களுக்கு மட்டும் பேசும் மற்ற சட்டங்கள், ஆனால் 14 போன்றவை மட்டும்தான் 'யாராக இருந்தாலும்', என்று பேசும். இப்போது வந்திருக்கிற 'சட்ட விரோதமாக வந்திருக்கிறவர்களுக்கும்' இது பொருந்தும் என்று சொல்கிறோம். இதில் எதற்கெல்லாம் சமத்துவம் மீறப்பட்டிருக்கிறது என்று சொன்னோம். வருகிறவர்கள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள் என்றால் எல்லா நாட்டையும் என்றுதான் சொல்லவேண்டும். ஏன் மூன்று நாடுகளைப் பற்றி மாத்திரம் சொல்கிறார்கள்? அடுத்தது, அவர்களுடைய மதத்தைப் பற்றி பாகுபாடு காட்டப்பட்டிருக்கிறது. யாருக்கும் பாகுபாடு காட்டக்கூடாது; ஆனால் மதத்தைப் பற்றி பாகுபாடு காட்டியிருக்கிறது. நாடுகளைப் பற்றி பாகுபாடு காட்டியிருக்கிறது. அடுத்தது இந்தியாவிற்குள் வந்த தேதியைப் பற்றி பாகுபாடு காட்டியிருக்கிறது. அசாமைப் பொருத்தவரைக்கும் அசாமில் இருக்கிற சட்டத்தின்படி, மார்ச் 1971, 26-ஆம் நாள் தான் வங்க தேச விடுதலை பிரகடனப் படுத்தப்பட்டது. அதனால் ஒரு முழு நாளை இடையில் விட்டுவிட்டு 24.3.1971-இக்கு முன்னாள் வந்தவர்கள் என்று வைத்திருக்கிறார்கள். அன்று இரவு பன்னிரண்டு மணிக்குள் வந்தவர்கள், அதற்குப் பின்னர் வந்தால் கிடையாது. அவர்களுக்கு அப்படி ஒரு நாள் வரையறை இருக்கிறது. இப்போது 31.12.2014, அதற்கு முன்னாள் வந்திருக்கவேண்டும். இதில் எது பாகுபாடாக இருக்கிறது எனில் இந்தியாவிற்குள் வரும் தேதியில்கூட பாகுபாடு காட்டுகிறார்கள். அடுத்து, இந்தியாவில் வாழும் இடம் பற்றியது. இடம் அசாமில் வாழ்பவர்களாக இருந்தால் அவர்களுக்கு ஒன்று; மற்றவர்களுக்கு ஒன்று. 'இன்னர்லைன்' என்று சொல்லப்படுகிற

வடகிழக்கு மாகாணங்களுக்கெல்லாம் இது பொருந்தாது என்று சட்டத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. இது எல்லாவற்றிலும் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதனைத்தையும் மீறி இருக்கிறார்கள். இது அரசியல் சட்டத்துக்கு, கேசவானந்த பாரதி வழக்குக்கு எதிரானது என்பதைத்தான் சட்ட வல்லுனர்கள் பேசுகிறார்கள். நியாயத்தின் அடிப்படையில் எதிரானது என்பது ஒன்று; சட்டத்தின் அடிப்படையில் எதிராக இருக்கிறது என்பது ஒன்று. இப்போது பேசவேண்டிய, அக்கறை செலுத்த வேண்டிய சங்கதிகள் ஆயிரம் இருக்கையில் இதை ஏன் பேசவேண்டும்?

பிரிட்டன், 'இரண்டாம் உலகப் போரில் இருந்து இங்கேயே ஒரு லட்சம் இந்தியர்கள் தங்கியிருக்கிறார்கள்; அழைத்துக் கொள்ள சொன்னால் அழைத்துக் கொள்ள மாட்டேன் என்கிறீர்களே' என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு எப்படியாவது மற்ற நாடுகள் எல்லாம் கூட்டிக் கொண்டு செல்கிறார்கள். நடந்து முடிந்த காமன்வெல்த் மாநாட்டின்போது அந்த பிரதமர் தெரசாமேவுக்கும் இவருக்கும் இடையில் பேச்சுவார்த்தை; ஒப்பந்தம் முடிவாகவில்லை. இவர்கள் சொல்கிறார்கள் ஒரு ஐந்தாயிரம் பேரில் இருந்து பத்தாயிரம் பேர் இருப்பார்கள் என்று நாங்கள் நினைக்கிறோம் என்று சொல்கிறார்கள். அவர்கள் 90 ஆயிரத்திலிருந்து ஒரு லட்சம் பேர் என்று சொல்கிறார்கள். உங்கள் நாட்டுக்குக் கூட்டிக் கொண்டு போங்கள் என்கிறார்கள்.

சீக்கியர்களும் இந்துக்களும்தான் அதிகம் இருக்கிறார்கள். அவர்கள் அங்கேயே இருக்கட்டும் என்று இவர்கள் நினைக்கிறார்கள். இன்றைக்கு செய்தி அது. ஆக, எல்லோருக்கும் ஒவ்வொரு விதிகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த சூழலில் தோழர்களே! அரசியல் சட்டத்துக்கு எதிரானது மட்டுமல்ல; பொது நியாயத்திற்கு எதிரானது. அங்கிருந்து வந்தவர்களுக்கு மட்டும் இல்லை; இங்கு வாழ்பவர்களுக்கும் எதிரானது என்று தான் திரும்பத் திரும்பச் சொல்கிறோம். இங்கு ஆறுமாதம் குடியிருந்து இன்னும் 6 மாதம் குடியிருக்க திட்டம் இருக்க வேண்டும் என்று சொன்னால் நம்மில் 30,40 விழுக்காடு ஆட்கள் போய்விடுவார்கள். உடலுழைப்புத் தொழிலாளர்கள் பழங்குடியினர் அவர்கள் எதையுமே சொல்லமுடியாது. எங்கிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. இப்போது சொல்கிறார்கள், இல்லை என்று நமக்கு கூடச் சொன்னார்கள், நீட் வேண்டாம் என்று கேட்டோம். சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்றிக் கொடுங்கள், நாங்கள் நீக்கித் தருகிறோம் என்று

நிர்மலா சீதாராமன் பேசினார். அதற்கு முன்னாள் பாரதிய ஜனதா கட்சியின் செய்தி தொடர்பாளர் அவர்கள் சொன்னபோது தமிழ்நாட்டுக் கட்சிக்கு பொறுப்பாளராகவும் இருந்தார், தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சியின் பொறுப்பாளர், அதற்கு முன்னால் செய்தித் தொடர்பாளர், மத்திய அமைச்சர் அவர்கள் சொல்கிறார் நீங்கள் ஒருசட்டத்தை இயற்றி கொடுங்கள் நாங்கள் விலக்குத் தருகிறோம் என்று. ஆனால் கொடுக்கவில்லை. இப்போது இந்தியர்களுக்குப் பாதுகாப்பில்லை, பாதிப்பில்லை என்றுதான் சொல்வீர்கள். இந்தியாவில் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிற உங்களுக்குப் பிடிக்காதவர்களையும் உங்களை வெளியேற்றுகிற வாய்ப்பாகவே இது அமையும். அவர்கள் எதிரியாக இஸ்லாமியர்களை வைத்திருப்பது மட்டுமில்லை. தமிழர்களையும் எதிரியாகத்தான் நினைக்கிறார்கள். நாங்களெல்லாம் முதலில் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டும் சமஸ்கிருதம் படிக்கிறோம் என்று ஆசையாக இருக்கிறது என்று கேட்டோம், அம்பேத்கர் கேட்டார், நான் கற்றுக்கொள்கிறேன் என்றார். யாரும் சொல்லித்தர முன்வரவில்லை. அவர் பார்சியில் இருந்து, ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கப்பட்டதைப் படித்துத்தான் இவ்வளவு சொன்னார். ஒருவேளை இன்னும் கொஞ்சம் பிட்டுப்பிட்டு வைத்திருப்பார் என்று கருதித்தான் கொடுக்கவில்லை போலும். இப்போது எங்களை எல்லாம் படி படி, சமஸ்கிருதம் படி என்கிறார்கள். என்ஜினியரிங் கல்லூரியில் எதற்கு சமஸ்கிருதம் வைக்கவேண்டும். அங்கே படி என்கிறார்கள். ஐஐடியில் படி, எல்லா இடத்திலும் சமஸ்கிருதம் படிக்கவேண்டும். நாங்கள் வேண்டாம் என்று சொல்வதை எங்களிடம் கொடுத்துவிட்டு, வேண்டும் என்பதைக் கொடுக்க மறுக்கிறார்கள். அணு உலை வேண்டாம் என்போம்; மீத்தேன் வேண்டாம் என்போம்; இல்லை, கொடுக்கிறேன் வைத்துக்கொள் என்கிறார்கள்.

இப்போது மீண்டும் ஒரு குழப்பம். பொதுத் தலைமை தளபதி ஒருவரைப் போட்டிருக்கிறார்கள். அவர் சொல்கிறார், இந்த அரசியல் தலைவர்கள் சும்மா பேசிக்கொண்டிருக்கிறார்கள், எதிர்த்துப் பேசுகிறார்கள் என்று இராணுவத் தளபதி பேசுகிறார். என்றைக்கு அவர் (இராணுவ தளபதி) பேசுவதை நாம் பார்த்திருக்கிறோம். அவன் முதலிலேயே சொன்னான், இந்துக்களை இராணுவமயமாக்குவோம், இராணுவத்தை இந்துமயமாக்குவோம் என்று. இதற்கு முன்னாலேயே நடந்தது, பழைய தலைமைத் தளபதி ஒருவர் இருந்தார். அவர் இணைஅமைச்சராக ஆக்கப்பட்டார். ஓய்வு பெற்று கொஞ்ச

நாளிலேயே அவர்கள் ஊரில் வந்த ஒரு அணுஉலைக்கு எதிரான போராட்டம், அவர் தலைமையில் நடந்தது. பிஜேபிக்கு ஆதரவாக. நடந்தது. அவரது ஊருக்குப் பக்கத்தில் இரத்தினகிரி என்ற ஒரு ஊர் இருக்கிறது. இங்கேதான் அல்போன்சா மாம்பழம் ஏராளமாக விளையும். இந்த அணுஉலைக் கதிர்வீச்சால் மாம்பழ விளைச்சல் பாதிக்கப் பட்டுவிடும், இந்த பகுதியின் பொருளாதாரமே சீர்குலைந்து போய்விடும் என்று போராடினார். மக்கள் சாவார்கள் என்று சொல்லவில்லை; மாம்பழம் எல்லாம் கெட்டுப் போய்விடும் என்றார். அதற்கு அவர்தான் தலைமை தாங்கிப் போராடினார். அப்போதுதான் அது நமது கூடங்குளத்துக்கு வந்தது. அவர்தான் வி.கே.சிங், தலைமைத் தளபதியாக இருந்தவர். உள்துறை இணை அமைச்சராக இருந்தார். இப்போது இவர் பேசியிருக்கிறார். இன்றைக்குக்கூட ஏதோ ஒரு கருத்துப்படம் போட்டிருந்தார்கள். ‘யூனிபார்ம் எடுத்து வா’ எனக் கூறுவார். பணியாள் அரைடவுசர் எடுத்து வருவான், இவர் சொல்வார், “இது ரிட்டயர்மென்ட்குக்கு அடுத்த நாளுக்கு. இப்போது, இராணுவச் சீருடையை எடுத்துக்கொண்டு வா” என்பதாகப் போட்டிருந்தார்கள். அப்படித்தான் தயாராக இருக்கிறார்கள்.

இப்போது நாம் என்ன செய்வது? இப்படித்தான் இருக்கும் என்று போய்விடுவதா? இதை மாற்றமுடியாது என்று நாம் நினைத்துக் கொண்டிருப்பதா? நாம் எண்ணிக்கையில் குறைவாக இருக்கிறோம், நம்மால் என்ன செய்யமுடியும் என்று நினைத்தாரா பெரியார்? அப்படியெல்லாம் நமது தலைவர்கள் நினைக்கவில்லை; பெரியார் அரசியல் சட்டத்தில் கல்விக்கு இடஒதுக்கீடு இல்லை என்ற தீர்ப்பு வந்தபோது; இந்தியாவில் இருந்த மாகாணங்களில் ஒரு மாகாணம், அதில் ஒரு சின்ன கட்சி, நாம் எதிர்த்து என்ன செய்யமுடியும் என்று நினைத்திருந்தால் நமக்குக் கல்வி உரிமையே கிடைத்திருக்காது. மராட்டியத்தில் 150 பேர் பகுத்தறிவாளர்கள் மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டம் கொண்டு வரவேண்டும் என்றார்கள். நரபலி கொடுக்கிறான், சட்டம் வேண்டும் என்று முதலில் 100 பேர் ஆர்ப்பாட்டம், 200 பேர் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். இப்போது தடுப்புச் சட்டம் வந்துவிட்டது. அந்த நாட்டின் சட்டம் முழுமையாக வந்ததா என்பது இல்லை; முடியும், நம்மில் எத்தனை பேர் நாம் இந்த போராட்டங்களை எதிர்க்குரல் எழுப்புவதில், எதிர்ப்பைக் காட்டுவதில், நாம் வெளிப்படையாக இருந்திருக்கிறோம். அமைதியாக இருந்தால் அரசினர் என்ன எண்ணிக் கொள்வார்கள்? எதிர்ப்பவர்களைத் தவிர மீதி எல்லாரும் ஆதரிக்கிறார்கள்

என்றுதானே கருதுவார்கள். இந்த நாட்டில் 7 கோடி பேர் இருக்கிறார்கள், வீதிக்கு வந்தவர்களைக் கணக்குப் போட்டால் ஒரு இலட்சம் பேர் இருக்கலாம், அதிகம் போனால் 10 இலட்சம் பேர் இருக்கலாம், மீதி இருப்பவர்கள் எல்லாம் எங்களைத்தான் ஆதரிக்கிறார்கள் என்று அரசினர் நினைப்பார்கள். எனவே, எந்த வகையிலாவது நம் எதிர்ப்பை நாம் வெளிப்படுத்தவேண்டும். இனி ஒவ்வொன்றாக வரும், இப்போது சீக்கியர்கள் அவர்களை எடுத்துக் கொள்கிறேன் என்று சொன்ன பிறகும் ஏன் போராடுகிறார்கள்? சீக்கியர்களுக்குத்தான் குடியுரிமை உண்டு என்று சொல்லியிருக்கிறார்களே? பின் ஏன் எதிர்த்துப் போராடுகிறார்கள்? இப்போது NPR அசாமில் கணக்கிட்டார்கள், சென்ற ஆண்டு 2018-இல், 40 இலட்சம்பேர். இப்போது 2019-இல் கணக்கிடுகிறார்கள் 19 இலட்சம் ஆகிவிட்டது. இடையில் என்ன நடந்தது என்று தெரியவில்லை. முதலில் எடுத்தக் கணக்கு தப்பா? இப்போது எடுத்தக் கணக்குத் தப்பா? புதுக்கதை ஏதாவது சொல்கிறார்களா? புதுச்சான்றிதழ் கொடுத்திருக்கிறார்களா? தெரியாது நமக்கு.

அப்போது இதில் 12 இலட்சம் பேர் இந்துக்கள், 7 இலட்சம் பேர்தான் முஸ்லிம்கள். இதில் முதலில் என்ன செய்யப் போகிறார்கள்? முதலில் சட்ட விரோதக் குடியேறிகளான இந்துக்களுக்குக்கெல்லாம் குடியுரிமை உண்டு என்று சொல்லிவிடுவார்கள். மீதி நின்றுபோகிறவர்கள் யார், அவர்களை என்ன செய்யப் போகிறார்கள் என்பதற்குத் திட்டமே கிடையாது. கண்ணன் கோபிநாத் என்கிற ஒரு ஐஏஎஸ் அதிகாரி; காஷ்மீரில் நடக்கும் அத்து மீறல்களுக்கு எதிராகப் பணி துறந்தவர். அவர் கேட்டார் என்ன செய்யப்போகிறீர்கள், நாடு கடத்தப் போகிறீர்களா? இந்துவா, முஸ்லிமா என்பதைப் பற்றிக் கவலையில்லை. இங்கே வங்காளிகள் வேண்டாம். அவர்கள் பல இலட்சமாக வந்து குடியேறியதால் எங்கள் அசாமின் மொழி, பண்பாடு, பொருளாதாரம், சமநிலை எல்லாமே சீர்குலைந்து விட்டது, அவர்களை வெளியேற்றுங்கள் என்று கேட்கிறார்கள். 19 இலட்சம் பேர் அல்லது ஏழு இலட்சம் பேரை அனுப்பினால் எந்த நாட்டுக்கு அனுப்புவது, அவர்களை எந்த முறையில் அனுப்புவீர்கள்? கப்பல் ஏற்றி அனுப்புவீர்களா? விமானத்தில் ஏற்றி அனுப்புவீர்களா? அசாம் கணக்கெடுப்பு குறித்து சொல்லி யிருக்கிறார்கள். 52,000 பணியாளர்கள் 6 ஆண்டுகள் வேலை செய்திருக்கிறார்கள். 6,000 கோடி செலவு என்கிறார்கள். அவர் சொல்கிறார் தன்னை நிறுவிக் கொள்வதற்காக பொதுமக்கள் ஒரு 8000 கோடி செலவு செய்து இருப்பார்கள் என்கிறார். சான்றிதழ்

சும்மா கொடுப்பானா? இந்த பிரச்சனையில் 200 என்றால் 2000 ரூபாய் கேட்பார்கள். அவர் சொல்கிறார் மூன்று கோடி பேரைக் கணக்கெடுப்பதற்கு இவ்வளவு செலவாகி இருந்தால் 130 கோடி பேரைக் கணக்கெடுப்பதற்கு எவ்வளவு செலவாகும்? எவ்வளவு செலவு செய்ய வேண்டியிருக்கும்? அதைவிட இவர்களைத் தங்க வைக்க ஒரு முறையைக் கொண்டுவந்தார்கள். 3,000 பேருக்கு முகாம் கட்டி இருக்கிறார்களாம். அவர் கேட்கிறார் 3000 பேருக்கு 40 கோடி என்றால் 7,00,000 முஸ்லிம்களுக்கு என்றாலும் அவர்களுக்கு எப்படி செலவு செய்வீர்கள்? இந்தியாவிடம் பணம் இருக்கிறதா? அல்லது அவர்கள் எவ்வளவு காலத்திற்கு இருக்கப் போகிறார்கள்? வாழ்நாள் முழுவதும் இருப்பார்களா? அவர்களுக்குக் குழந்தை பிறந்தால் அவர்கள் அங்கேயே இருப்பார்களா? முகாமிலேயே காலம் முழுவதும் வைத்திருப்பீர்களா? ஆண்டாண்டு காலத்திற்கு இருப்பார்களா? உனக்கு எந்தக் கணக்கும் இல்லை. உங்களிடம் பணம் இல்லை, அவர்களை எப்படி நிர்வகிப்பது என்கிற திட்டம் இல்லை. ஆனால் அவர்களை வெளியேற்றிவிட வேண்டும் என்று சொல்கிறீர்கள். இப்படித்தான் ஒருவர் சொன்னார், ஆடு மேய்ப்பதை அரசாங்க வேலையாக ஆக்குவேன் என்று. திராவிட இயக்கம் ஆடு மேய்த்தவனைப் படிக்கச் சொன்னது, அரசாங்க வேலைக்கு அனுப்பியது. இப்போது அரசாங்க வேலையாக ஆடு மேய்ப்பதை அறிவிக்கிறார் என்றால், சரி, அத்தனை பேருக்கும் ஆட்டுக்கு எங்கே போவீர்கள்? மேய்ச்சல் நிலம் போதுமான பரப்பு இருக்கிறதா? சும்மா சொன்னால் கைதட்டி விட்டுப் போய்விட முடியுமா? கேள்வி கேட்போம் இல்லையா? அப்படித்தான் இவர்களிடமும் நிறைய கேள்விகளைக் கேட்க வேண்டியிருக்கிறது? எங்கே இத்தனை பேரையும் அடைத்து வைத்திருப்பீர்கள்? அவர்களுக்கு, உணவுக்கு, பராமரிப்புக்கு எவ்வளவு செலவு செய்யப்போகிறீர்கள்? கணக்கெடுப்புக்கு என்ன செய்வீர்கள்? அவ்வளவு பணம் அரசிடம் இருக்கிறதா?

இப்போதே அரசு நடத்தப் பணம் இல்லை என்று ஒரு இலட்சத்து 75 ஆயிரம் கோடி ரூபாய்கள் ரிசர்வ் வங்கியிலிருந்து எடுத்தீர்கள். அதில் ஒன்றரை இலட்சம் கோடியை 800 பேருக்குக் கடன் தள்ளுபடி செய்துவிட்டீர்கள். 25 கோடிதான் மக்களுக்கு என அரசிடம் வந்திருக்கிறது. மீதி எல்லாம் வராத வங்கிக் கடன் தள்ளுபடிக்கு பயன்படுத்தி இருக்கிறீர்கள், என்ன செய்யப் போகிறீர்கள்? மத்திய அரசின் நிதி நிலைமை ஐசியூவில் இருக்கிறது என்று உங்கள் பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்ரமணியம் உள்ளிட்ட ஒவ்வொருவரும் இந்தியாவின் நிலையைச் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள்.

2020 செப்டம்பரில் நம்முடைய பணவீக்கம் 13 சதவீதமாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னதான் ஆகும்? இந்தச் சூழ்நிலையில் அதையெல்லாம் கவனிக்காமல் வளர்ச்சியைப் பற்றிக் கவனிக்காமல், முதலீட்டைப் பற்றி கவனிக்காமல், கிராமப்புற மக்களைப்பற்றிக் கவலை இல்லாமல், வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கும் இளைஞர்களைப் பற்றிய கவலையில்லாமல், இந்த சூழலில் எல்லாவகையிலும் பொருந்தாதச் சட்டம், மக்கள் விரோதச் சட்டம், அரசியல் சட்ட விரோதச் சட்டம். பொருளாதாரத்தை நிலை நிறுத்த முடியாதச் சட்டம் இது.. எனவே இதை அறிந்து கொள்வது என்பதைவிட இன்னும் கூடுதலாகத் தேடி அறிந்துகொள்ளலாம். ஆனால் இதை எதிர்ப்பதை, நாங்கள் எதிர்ப்பாக இருக்கிறோம் என்று காட்டுவதற்கு எந்தவகையிலாவது, கோலம் போட்டுக்கூட மாணவர்கள் காட்டியிருக்கிறார்கள், எப்படியாவது நமது எதிர்ப்பைத் தொடர்ந்து காட்டிக்கொண்டே இருக்கவேண்டும்.

இன்னொரு முறை வாக்கெடுப்பு வந்தால் வெற்றிபெறப் போவதில்லை. வாக்கு தலைகீழாக மாறிவிடும். மாநிலங்களவையில் தங்களுக்குப் பெரும்பான்மை உள்ளது என்ற துணிச்சலில்தான் அவர்கள் கொண்டு வந்தார்கள். இனிமேல் ஒரு அச்சம் வந்திருக்கும், இனி அவர்கள் அடுத்த சட்டத்திற்கு என்ன செய்வார்கள் என்று கருதக்கூடும். ஆனால் அவர்களை நாம் அத்தோடு விட்டுவிடக்கூடாது. வெளியே வந்தவர்கள் திரும்பவும் உள்ளே போகாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டிய கடமை நமக்கு உண்டு. இது எதிர்காலத்தையே அழித்துவிடுகிற ஆட்சி. அடுத்து ஒரு தேர்தல் இருக்குமா என்று தெரியாது. கேசவானந்த பாரதி தீர்ப்பில் சொல்லியிருக்கிறார்கள். இனி புது அரசியல் சட்டம் எல்லாம் எழுதமுடியாது என்று தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் எந்தச் சட்டத்தை மதிக்கிறார்கள்? எனவே ஊர்வலத்தில் கலந்து கொள்ளலாம், துண்டறிக்கையை அச்சிட்டுக் கொடுக்கலாம், எப்படியாவது தொடர்ந்து பெரும் எதிர்ப்பைக் காட்ட வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. அந்த வேண்டுகோளுடன் விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

# பின்னிணைப்பு 1

*NPR, NRC, CAA சட்டங்களை திரும்பப் பெற வலியுறுத்தி 16.02.2020 அன்று கும்பகோணத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும், 21.02.2020 அன்று திருப்பூர் ஷாஹின்பாஃக் திடலில் நடைபெற்ற தொடர் முழக்கத் தர்ணா போராட்டத்திலும், 23.02.2020 அன்று ஈரோடு திருநகர் காலனியில் உலகத் தாய்மொழி நாள் பொதுக்கூட்டத்திலும் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்கள் நிகழ்த்திய உரையின் சுருக்கம்...*

குடியுரிமை திருத்தச் சட்டத்தின் பாதிப்புகளை எனக்கு முன்னர் உரையாற்றிய பலரும் விளக்கியிருக்கிறார்கள். குறிப்பிட்ட மதத்தினரை மட்டும் விலக்கி, குறிப்பிட்ட நாடுகளை உலகின் கொடூரமான நாடுகள் என்பதாக அடையாளப்படுத்துகிற ஒரு சட்டம்; அதிலும் ஒரு குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு முன்னால் வந்தவர்களுக்கு மட்டும் – 2014-க்குப் பின் அந்த நாடுகளெல்லாம் எந்த கொடுமைகளையும் செய்வதில்லை; 2014 உடன் நிறுத்திவிட்டார்கள் என்பதைப் போல – இந்த சட்டத்தை ஏன் கொண்டு வந்தார்கள் என்பது ஒருபுறமிருக்கட்டும்.

பல நேரங்களில் சங்கிகள் உண்மையைச் சொல்லி விடுவார்கள். அசாம் மாநிலத்தின் பாஜகவின் முன்னணித் தலைவரும், நிதி அமைச்சராகவும் இருக்கும் பிஸ்வாஸ் சர்மா, அசாமில் உள்ள ஜி-பிளஸ் என்ற தொலைக்காட்சிக்கு 2019 ஜனவரியில் பேட்டியளித்துள்ளார், 'நாங்கள் பெரும்பான்மையான இடங்களில் 10,000 அளவிலான வாக்குகளில் தான் இழந்து கொண்டிருக்கிறோம் இப்போது நாங்கள் இங்கிருக்கும் இந்துக்கள் ஓட்டையும் இழந்து விடுவோமேயானால், நாங்கள் கட்டாயமாக 17 தொகுதிகளை இழந்து விடுவோம். ஆனால், வரவுள்ள குடியுரிமைத் திருத்தச் சட்டத்தினால், குறைந்தது 17 தொகுதிகள் கட்டாயம் எங்களுக்கு எப்போதும் உறுதியாகிவிடும்' என்று அந்த பேட்டியில் கூறுகிறார். ஏனென்றால் அசாமில்தான் இந்த சட்டம் முதன் முதலில் வேறு காரணத்திற்காக கொண்டுவரப்பட்டது. இன்றைக்கும் கூட அசாமில் 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை மூன்று கோடியே 15 இலட்சம். அதில் அசாம் மொழி பேசக்கூடிய அசாமியர்கள் 1 கோடியே 50 இலட்சம் பேர்தான். அவ்வளவு மக்கள் வங்க தேசத்திலிருந்து அண்டை நாடான இந்தியாவில், அசாமில்

நுழைந்திருக்கிறார்கள். அவர்கள் மொத்த வங்காளிகளையும் சேர்த்துத்தான் சொல்கிறார்கள். அசாமிலிருக்கிற மொத்த உயர் பதவிகளையும், வணிகத்தையும் அவர்கள்தான் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய பண்பாடு, மொழி சிதைந்து விடும் என்ற அச்சத்தாலும், தங்கள் வாழ்வுரிமையே மறுக்கப்படலாம் என்ற அச்சத்தினால்தான் அசாம் மக்கள் இங்கு வந்து குடியேறியவர்களை வெளியேற்றுங்கள் என்று போராடத் தொடங்கினார்கள். அதற்காக பலமுறை பேசப்பட்டு அதற்காக 1985-இல் ஒரு ஒப்பந்தம் போடப்பட்டு சில சட்டத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. அதற்கு முன் 1987 வரை இந்த நாட்டில் பிறந்தவர்கள் அனைவரும் இந்தியாவின் குடிமக்கள் என்று சட்டம் சொல்லி வந்தது. மூன்று வழியில் அதைச் சொன்னார்கள் ஒன்று இங்கே பிறந்தவர்களுக்கு, இரண்டு பெற்றோர் வழி வந்தவர்களுக்கு, தொடர்ந்து இங்கு வாழ்ந்து வந்தவர்களுக்கு, இயல்புரிமை (Naturalisation) என்ற அடிப்படையில், இந்தியா தம்மோடு இணைத்துக் கொண்ட நாடுகளைச் சேர்ந்தவர்களும் இந்திய குடிமக்கள், இவ்வளவு தான் சட்டம்.

1987 ஆம் ஆண்டுதான் அசாம் மக்களோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தின் காரணமாக, ஒரு திருத்தத்தைக் கொண்டு வருகிறார்கள், 'பெற்றோரில் ஒருவர் இந்தியராக இருக்க வேண்டும்; இல்லையென்றால் குடியுரிமை இல்லை' என்பது தான் அந்த சட்டத் திருத்தம். அதில் ஒரு நியாயம் இருந்தது.

சில பேரை நல்லவர்கள் என்று கூறுவார்கள், பாம்பில்கூட நல்ல பாம்பு உண்டல்லவா? அப்படி பாஜகவில் இருந்த நல்லவர் வாஜ்பாய். அப்படித்தான் அவரைக் கூறுவார்கள். 2003 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த அவர் அமெரிக்காவில் உள்ள சிலேட்டன் தீவிற்குச் சென்றார். அங்கு அதிகம் இருப்பது பார்ப்பன பனியாக்கள் தான்; எளிமையாக கூறினால் இந்துத்துவவாதிகள். அவர்கள் வாஜ்பாயிடம் ஒரு கேள்வியைக் கேட்டார்கள், "நீங்கள் ஆட்சிக்கு வந்தது 1999 இல்; 2004 இல் ஆட்சி முடியப் போகிறது; இன்னும் இந்துத்துவ அஜெண்டா எதையும் நிறைவேற்றவில்லையே"? என்று கேட்கிறார்கள். அதற்கு வாஜ்பாய் கூறுகிறார், "இப்போது மற்ற கட்சிகளின் ஆதரவோடு நாங்கள் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறோம் எங்களுக்குப் பெரும்பான்மை கிடைக்குமேயானால் இத்தனை ஆண்டுகள் பொறுத்திருக்க மாட்டோம்; சில மாதங்களிலேயே நிறைவேற்றியிருப்போம்" என்று அப்போது 2003இல் கூறினார். தற்போது 2019-இல் அறுதிப் பெரும்பான்மை கிடைத்திருக்கிறது.

அதனால்தான் அவர்கள் வேகவேகமாக செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். வாஜ்பாயி ஆட்சியில் இருந்த 2003-இல் தான் குடியுரிமைச் சட்டத்தில் மேலும் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார், 'பெற்றோர்களில் ஒருவர் இந்தியராக இருக்க வேண்டும் என்பதோடு மற்றொருவரும் சட்ட விரோதமாகக் குடியேறியவராக இருக்க கூடாது' என்பதே அந்தத் திருத்தம். அதோடு இணைந்து தேசிய மக்கள் பதிவேடும், குடிமக்கள் பதிவேடும் உருவாக்கப்பட்டன. அதுதான் இப்போதுவரை நடைமுறையில் இருக்கிறது.

எனவே, 1987க்கும் 2003க்கும் இடையில் பிறந்தவர்கள், அவர்கள் இஸ்லாமியராக மட்டுமில்லை, இந்துவாக, கிறித்துவராக, சீக்கியராகயாராகஇருந்தாலும்தங்கள்பெற்றோரில் ஒருவர் இந்தியாவில் பிறந்தவர் என்பதை நிரூபித்தாக வேண்டும்; 2004க்கும் பின்னர் பிறந்தவர்கள் தங்களின் தாய், தந்தை இருவரும் பற்றிய ஆவணங்களைக் காட்டி நிரூபித்தாக வேண்டும். அப்படியெனில் இந்த தேசிய மக்கள் பதிவேடும், இந்தியக் குடியுரிமைப் பதிவேடும் இஸ்லாமியருக்கு மட்டும் எதிரானதா? இல்லை, அனைத்துத் தரப்பினருக்கும் எதிரானது. சட்டவிரோதக் குடியேறிகளை அரசாங்கம் தனது துறைகளின் வழியாக செய்ய வேண்டிய ஒன்றை எளிய குடிமக்கள் தலையில் சுமத்தப் பார்க்கிறது. ஒரு ஊரில் திருட்டு ஒன்று நடந்தால், காவல் துறை, உளவுத் துறையினர் கண்டுபிடிப்பதா? அல்லது எல்லா மக்களும் தாங்கள் திருடவில்லை என்பதை நிரூபியுங்கள் என்று மக்களை அலைக்கழிப்பதா? என்று எழுப்பப்படும் கேள்விகள் எவ்வளவு சரியானது என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

எதற்கெடுத்தாலும் முன்னால் இருந்த ஆட்சியை இவர்கள் காரணம் காட்டிச் சொல்வார்கள். காங்கிரஸ்தான் தேசிய மக்கள் பதிவேட்டுக் கணக்கெடுத்தது; காங்கிரஸ்தான் குடிமக்கள் பதிவேட்டில் கணக்கெடுத்தது என்று. ஒரு பகுதி உண்மைதான்; காங்கிரஸ்தான் கணக்கெடுத்தது. ஆனால் ஒட்டுமொத்த இந்தியர்களையும் கணக்கெடுக்கவில்லை. 2004இல் எல்லையோரத்தில் இருக்கிற மக்களுக்குக் குடியுரிமை பதிவேடு செய்தார்கள். எல்லையோரத்தில் இருக்கிறவர்கள் இந்த நாட்டுக்காரர்களா? இந்தியர்களா? என்று தெரியாது என்பதற்காக. மும்பையில் தாக்குதல் நடந்த பின்னால் 2009-இல் கடலோரங்களில் இருந்தவர்களுக்கும் குடியுரிமைப் பதிவு செய்தார்கள். மொத்தம் 66 இலட்சம் மக்களுக்கு மட்டும் தான் காங்கிரஸ் செய்தது. அதற்குக் காரணம் இருந்தது.

இப்போதும் சங்கிகள் சொல்கிறார்கள் பாகிஸ்தானைப் பிரித்துத்தான் பகைமையை உண்டாக்கிவிட்டது காங்கிரசு என்று. பாகிஸ்தானைக் காங்கிரசா பிரித்தது? பாரதிய ஜனதா கட்சிக்கு முன்னர் ஜனசங்கம்; அதற்கு முன்னால் ஆர்.எஸ்.எஸ்; அதற்கும் முன்னால் இருந்த இந்து மகாசபை அவர்கள் தான் தொடர்ந்து சொல்லிக்கொண்டே வந்தார்கள். "இரண்டு பகைமை கொண்ட தேசங்கள் அருகருகே வாழ்ந்துகொண்டிருக்கின்றன; ஒன்று இந்துக்கள் தேசம், மற்றொன்று முஸ்லிம்கள் தேசம்; இரண்டும் ஒரே தேசமாக முடியாது" என அகமதாபாத்தில் 1937-இல் நடந்த இந்து மகாசபைக் கூட்டத்தில் சாவர்க்கர் பேசினார். 1923-இல் வெளியிட்ட இந்துத்துவ பேரறிக்கையிலும் (Hindutva Manifesto) இதே கருத்தை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார். ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு தத்துவத்தை வகுத்தளித்த அதன் நீண்ட காலத் தலைவர் கோல்வாக்கர். 1938-இல் எழுதிய தனது 'நாம் அல்லது நமது தேசத்தின் வரையறை' என்ற நூலில் "இந்து அல்லாதவர்கள் இந்துக் கலாச்சாரத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும்; இந்து தேசத்துக்கு அடிமைப்பட்டவராக (sub-ordinated) எதையும் கோராதவர்களாக, எந்த சிறப்புரிமையும் இல்லாதவர்களாக, குடியுரிமையைக்கூட எதிர்பார்க்காதவர்களாக, (not even citizen's rights) இருக்கவேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

யார் பிரிவினையைக் கொண்டு வந்ததாகக் கூறுகிறார்கள். ஜின்னா 1940களில் பாகிஸ்தான் பிரிவினை குறித்துப் பேசத் தொடங்கினார்; 1940 மார்ச்சில் தான் முஸ்லிம் லீக் தலைமைக் குழு பாகிஸ்தான் கேட்டுத் தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால் இவர்களெல்லாம் 1908-இலியே ஆரம்பித்துவிட்டார்கள். பாய் பரமானந்தா என்ற ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர், கோல்வாக்கர், சாவர்க்கர் என இவர்களெல்லாம் சொல்லிக்கொண்டே வந்தார்கள். இவர்கள் சொல்கிறார்கள் 2014 டிசம்பர் 31 வரை ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், வங்க தேசம் ஆகிய நாடுகளில் இருந்த வந்தவர்களுக்கு குடியுரிமை உண்டு என்று. அவ்வாறு வந்தவர்கள் வெறும் 31,313 பேர்தான். இவ்வளவு குறைந்த பேருக்கா நாடாளுமன்றத்தைக் கூட்டி திருத்தச் சட்டத்தை கொண்டு வருவார்கள்? இல்லை. அசாமில் சட்டம் கொண்டுவரப்பட்டு கணக்கெடுக்கப்பட்டு குடியுரிமை அற்றவர்கள் என அறிவிக்கப்பட்டவர்கள் 40 இலட்சம் பேர். இந்தக் கணக்கெடுப்பின் யோக்கியதையை நாம் பார்க்க வேண்டும் 2018 கணக்கெடுப்பின்படி சட்டவிரோதக் குடியேறிகள் 40 இலட்சம்; மீண்டுமொருமுறை கணக்கெடுங்கள் என்றார்கள். இரண்டாவதாக கணக்கெடுத்தால் 19 இலட்சம் என்று

கூறுகிறார்கள். *19* இலட்சத்தில் *12* இலட்சம் பேர் இந்துக்கள். இப்போது பிஸ்வாஸ் சர்மா என்ற பா.ஜ.க. நிதியமைச்சர் *2019* ஜனவரியிலேயே அளித்திருந்த தொலைக்காட்சிப் பேட்டியைப் பொருத்திப் பாருங்கள். அந்த *12* இலட்சம் பேருக்குக் குடியுரிமை கொடுக்க வேண்டும், அது தான் அவர்களின் நோக்கம். எனவே திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள்.

சரி இப்போது நாம் இஸ்லாமியர்களுக்கு இந்த சட்டம் ஆபத்து என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால் பாஜக இஸ்லாமியர்களுக்கு மட்டுமல்ல, இந்து மதத்தவர் என்று சொல்லப்படுகின்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிறப்படுத்தபட்ட சூத்திரர்கள் என்போருக்கும், நாத்திகர்களுக்கும்கூட எதிராகத்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கோலம் போட்டால்கூட கைது செய்கிறார்கள். வட மாநிலங்களில் அல்ல; இங்கே பழனிச்சாமிஜி ஆட்சியிலும். இந்நிலையில் தேசிய மக்கள், குடியுரிமைப் பதிவேடுகளால் நாம் எப்படி பாதிப்படையப் போகிறோம் என்பன பற்றி மட்டும் சிலவற்றை கூறிவிடுகிறேன்.

குடியுரிமைத் திருத்தச் சட்டம் பற்றியல்ல, நான் கூறுவது தேசிய மக்கள் பதிவேடு சட்டம் பற்றி. நமக்கு மக்கள் பதிவேட்டிற்குத் தனியாக சட்டம் வேண்டுமா? பதிவேடு எடுக்க வேண்டுமா என்றால், பத்தாண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகை கணக்கெடுப்பு *(census)* நடந்துகொண்டுதான் இருக்கிறது. அனைத்து மக்களைப் பற்றிய பதிவும் இருக்கிறது. பின் எதற்கு மற்றொரு பதிவு? தேவையில்லையே! ஆனால் ஏன் எடுக்கிறார்கள்?

மக்கள் தொகை கணக்கெடுப்பில் *(census)* நாம் சொல்வதை அவர்கள் எழுதிக் கொள்வார்கள். எம்.ஜி.ஆரிடம் ஒருமுறை மதம் என்னவென்று சென்சசுக்காக கேட்டார்கள்; அவர் 'திராவிட மதம்' என்று கூறினார். எம்.ஜி.ஆர் இந்து மதம் என்று கூறவில்லை. ஆனால் அப்படி ஒரு மதம் உண்டா என்று கேள்வியெல்லாம் கேட்கக் கூடாது; மக்கள் சொல்வதை எழுதிக் கொள்ள வேண்டும். அதற்கென உள்ள கையேடு அப்படித்தான் கூறுகிறது. அதை எழுதிக் கொண்டார்கள். மக்கள் என்ன கூறுகிறார்களோ அதை எழுதிக் கொள்வார்கள். எம்.ஜி.ஆர்-ஐ திராவிட மதம் என்று தான் எழுதினார்கள். அதுதான் மக்கள் தொகை கணக்கெடுப்பு.

ஆனால் தற்போது இவர்கள் கொண்டுவந்துள்ள தேசிய மக்கள் பதிவேட்டில் தவறான தகவல்களைக் கூறினால் தண்டனை தரப்படும். உள்ள செய்திகளை மட்டும் கூற வேண்டும். சரி சொல்லி விடுகிறோம், ஆனால் உள்ளூர் அளவில் ஒரு அதிகாரி இருப்பார் அவர், சந்தேகமானவர்களை சந்தேகமானவர் என்று எழுதி வைக்கலாம். அவர்களுக்குத்தான் சிக்கல். அதை இஸ்லாமியர்களுக்கு மட்டும் போடுவார்கள் என்று கூறிவிட முடியாது. குடியுரிமை திருத்தச் சட்டம் வேண்டுமானால் இஸ்லாமியர்களைப் பிரித்து பார்த்தது என்று சொல்லலாம். ஆனால் தேசிய மக்கள் பதிவேட்டில் அந்தக் கணக்குக் கிடையாது. D என்று எழுதினால் (doubtful) சிக்கல்தான். அதைத் தவிர்க்க என்ன செய்ய வேண்டும்? ஆவணங்களைக் கொடுக்க வேண்டும். ஆவணங்களைக் கொடுப்பது இஸ்லாமியர்கள் மட்டுமா? அனைவரும்தான் கொடுக்க வேண்டும். அதில் சந்தேகம் வந்தால் நமது பிறப்புச் சான்றிதழைக் கேட்கிறார்கள். மோடியே இரண்டு பிறப்புச் சான்றிதழ் வைத்துள்ளார். இரண்டு பிறந்தநாள் அவருக்கு. 12ஆம் வகுப்புப் படித்த விஸ்நகர், எம். என். கல்லூரியில் 29.08.1949 இல் பிறந்தவர் என்று சான்றிதழில் உள்ளது. தற்போது பாஜக இணையதளத்தில் 17.09.1950 இல் பிறந்தார் என்று உள்ளது. வேறொருவர் ஆட்சியில் இருந்தால். அவருடைய சான்றிதழ்களைக் காட்டினாலே குடியுரிமை மோடிக்கு இல்லையென்று கூறிவிடுவார்கள். பிறப்பு, இறப்புப் பதிவு செய்ய வேண்டும் என்ற சட்டமே 1969இல் தான் கொண்டுவரப்பட்டது. அதற்கு பின்னர்தான் பதிவுகள் இருக்கின்றன. 1969இல் சட்டம் வந்ததென்றால் தற்போது 50 வயதிற்குட்பட்டோருக்கு மட்டும்தான் பிறப்புச் சான்றிதழ்கள் இருக்கும். என்னை சந்தேகநபர் என்று குறித்து வைத்தால் என்னுடைய தந்தையின் பிறப்புச் சான்றிதழை நான் எப்படி காட்ட முடியும் ? ஒருவரை இந்தியர் என்று காட்ட வேண்டும் அதற்கு தாய் அல்லது தந்தையின் சான்றிதழ் வேண்டும். அதில் ஒரு திருத்தம் காங்கிரசால் கொண்டுவரப்பட்டது பெற்றோரில் ஒருவர். அதற்கு முன் வரை தந்தை சான்றிதழை மட்டுமே காட்ட வேண்டும் என்று இருந்தது.

2004 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பெற்றோரில் ஒருவர் இந்தியர் என்பதற்கான சான்றிதழ் மட்டுமல்ல; மற்றொருவர் சட்டவிரோதமாகக் குடியேறியவர் இல்லை என்பதற்கான ஆதாரத்தையும் காட்டியாக வேண்டும். இந்த சட்டத்தை எதிர்த்து அய்.ஏ.எஸ் அதிகாரிகள் வெளியே வருகிறார்கள். கோபி கண்ணன் கேரளாவைச் சேர்ந்த அதிகாரி தனது பதவியை

விட்டு வெளி வருகிறார். தமிழகத்தைச் சேர்ந்த குஜராத்தில் மாவட்ட ஆட்சியராக இருந்த சசிகாந்த் செந்தில், இந்த சட்டத்தைப் பார்த்து பொறுத்துக் கொள்ள முடியவில்லை என்று பதவியை விட்டு வெளியே வந்துவிட்டார். இருவரும் இந்துக்கள் என்று சொல்லப்பட்டவர்கள்தான்; இஸ்லாமியர்கள் இல்லை. ஒரு அய்.ஏ.எஸ் அதிகாரியாக நான் இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவதா? அரசினர் இந்த சட்டத்தின் மூலம் மக்களை அசிங்கப்படுத்துகிறார்கள், அவமானப்படுத்துகிறார்கள், அந்நியர்களாக்க முயற்சிக்கிறார்கள் என்று கூறிவிட்டு பதவியை விட்டு வெளியேறியுள்ளனர்.

எல்லோரும் ஆதாரம் கொடுத்தாக வேண்டும் என்பது தான் சட்டம். D என்று எழுதிய அதிகாரியிடம் சான்றிதழ் கொடுக்க வேண்டும். அவர் சரிபார்த்து 90 நாட்கள் அல்லது தேவையேற்பட்டால் இன்னும் அதிக காலம் எடுத்துக் கொண்டு அவர் அதை ஆலோசித்து உங்களை ஏற்றுக் கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம். ஏற்றுக்கொண்டால் பட்டியலை வெளியிட வேண்டும். அந்த பட்டியலில் உள்ளவர்களை யார் வேண்டுமானால் ஆட்சேபிக்கலாம். அப்படி மற்றொருவர் நமது சான்றிதழ்கள் தவறு என்று கூறிவிட்டால் நாம் மீண்டும் மேல் முறையீட்டிற்கு செல்ல வேண்டும். அவரிடம் நாம் 30 நாட்களுக்குள் கூடுதல் ஆதரங்களை, சான்றிதழ்களைக் கொடுக்க வேண்டும் அந்த அதிகாரி ஆலோசித்து 90 நாட்களில் தீர்ப்பு கூறுவார். அதிலும் ஏற்றுக்கொண்டால் சரி. ஏற்றுக் கொள்ளாவிட்டால் மீண்டும் ஒரு மேல் முறையீடு செல்ல வேண்டும். சரியான நேரப்படி பார்த்தால் மொத்தம் 300 நாட்கள். எந்த வேலையும் செய்யாமல் நமது குடியுரிமையை நிரூபிக்க செலவழித்தாக வேண்டும். அதுமட்டுமில்லை சான்றிதழ்களின் விலையும் ஏறிக் கொண்டே போகும். இப்போது பிறப்புச் சான்றிதழ் 500 என்றால் 5000 ஆகும். ஏனென்றால் ஈழத்தில் போர் நடைபெற்ற போது குழந்தைப் போராளிகள் என்ற குற்றச்சாட்டைப் புலிகள் மீது கூறினார்கள் உயர்ஜாதிப் பணக்காரர்கள். அந்த ஊர் அரசுப் பிரதிநிதியிடம் சென்று 13 வயது என்று சான்றிதழ் கொடுக்கச் சொன்னார்கள். அதற்கு 50000 வரை பணம் கொடுக்கவும் செய்தார்கள். அய்.நா-வில் எனது குழந்தைகளைப் போராளிகள் ஆக்கிவிட்டார்கள் என்று பெரிய ஜாதி பணக்காரர்கள் செய்தார்கள். இதே போல் நாமும் பணம் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டியதுதான். இப்போது ஒரு ஆய்வு நிறுவனம் கூறியிருக்கிறது, "அசாமில் NRC-ஆல் அரசுக்கு ஆன செலவை விட மக்களுக்கு ஆன செலவு தான் இரண்டு

மடங்கு அதிகமாக இருந்தது' என்று. 1.600 கோடி அரசுக்கு செலவானது ஆனால் மக்கள் அதைவிட இரண்டு மடங்கு அதிகமாக செலவழித்துள்ளனர். ஆறு வருடம் கணக்கெடுக்க எடுத்துக் கொண்டார்கள். 52 ஆயிரம் பேர் இதற்காக வேலை செய்தார்கள். இதற்கு நாம் எவ்வளவு செலவு செய்வது? செலவு மட்டுமல்லாமல் ஓராண்டாக எந்த வேலையும் இல்லாமல் அலைய வேண்டும். அப்படி செய்தாலும் உள்ளூர்காரர்கள் மறுக்கலாம். சிறியதாக பொதுக் கூட்டம் நாம் போட்டாலே எதிர்ப்பு மனுவை காவல் துறையிடம் இந்துத்துவவாதிகள் கொடுப்பார்கள். காவல் துறையும் ஏற்றுக்கொண்டு எதிர்ப்பு மனு வந்துள்ளது, கூட்டத்தை நடத்த வேண்டாம் என்று நம்மிடம் கூறுவார்கள். நாம் கூறுவதை காவல் துறை கேட்பதில்லை. தற்போது பழனிச்சாமி ஜி ஆட்சியில் இதுபோன்றுதான் நடந்து கொண்டிருக்கிறது. இதே போல் ஏதாவது மனு கொடுத்துக் கொண்டிருப்பார்கள்; அந்த மனுவிற்கெல்லாம் நாம் பதில் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். இஸ்லாமியர்களுக்கு மட்டுமாகொடுப்பார்கள்? அனைவருக்கும்தான்கொடுப்பார்கள். யார் யாரெல்லாம் அவர்கள் கருத்தை எதிர்ப்பவர்களோ, ஏற்காதவர்களோ அவர்களுக்கு எதிராக மனு கொடுப்பார்கள்.

கல்புர்கி, கோவிந்த் பன்சாரே, நரேந்திர தபோல்கர், கவுரி லங்கேஷ் இவர்களெல்லாம் இஸ்லாமியர்களா? பிறப்பால் இந்துக்கள் தானே! பகுத்தறிவாளர்கள் என்று வேண்டுமானால் கூறலாம். இவர்களையே கொன்றவர்கள் நமக்கு எதிராக மனுவா கொடுக்க மாட்டார்கள்? நமக்கு எதிராக மனு கொடுப்பார்கள், நாம் அலைந்து கொண்டே இருக்க வேண்டும். இப்படிப்பட்ட சிக்கல்களை நாம் கவனிக்க வேண்டும்.

1996 ஆம் ஆண்டு தேர்தலின் போதே பாரதிய ஜனதா கட்சியின் தேசியக் குழு போபாலில் கூடியது, அதில் மூன்று தீர்மானங்கள் போடப்பட்டன அதில், 'சட்ட விரோதமாக வந்தடைந்தவர்களை கண்டறிய வேண்டும், அவர்களை பட்டியலில் இருந்து நீக்க வேண்டும், பின் அவர்களை நாடு கடத்த வேண்டும், (detection, deletion, deportation) ஆகிய தீர்மானத்தை நிறைவேற்றி 1996 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையாகவே கொடுத்தார்கள். தற்போது கொண்டுவரப்பட்டதல்ல இவை. இப்போது பெரும்பான்மை வந்ததால் செய்து கொண்டிருக்கிறார்கள். நாம் அவர்களை விட பலமடங்கு பெரும்பான்மையினராக இருக்கிறோம். பார்ப்பானும் பார்ப்பன அடிமையும் ஆர்.எஸ்.எஸ் இல் இருக்கிறான். ஏமாந்தகூட்டமும் இருக்கலாம். ஆனால் உழைக்கும்

மக்கள், சூத்திர, பஞ்சமர்கள், இஸ்லாமிய, கிருத்துவர்கள் எண்ணிக்கையில் அவர்களை விட பல்லாயிரம் மடங்கு அதிகமாக இருக்கிறோம் அவர்களின் இந்த சூழச்சிகளை ஏன் முறியடிக்க முடியாது என்பதற்குதான் இந்த போராட்டங்களை நாம் முன்னெடுத்துக் கொண்டிருக்கிறோம். பாரதிய ஜனதா கட்சி ஆள்கின்ற மாநிலங்களில் நடந்த போராட்டங்களில் மட்டும்தான் துப்பாக்கிச் சூடுகள் நடந்துள்ளன. வேறு எங்கேயும் துப்பாக்கி சூடு நடத்தப்படவில்லை. தற்போதுதான் தமிழ்நாட்டில் தடியடி தொடங்கியிருக்கிறது. இங்கே யார் ஆட்சி என்பதை நாம் முடிவு செய்து கொள்ள வேண்டும். நாம் வீறுகொண்டு வீதிக்கு வந்துள்ளோம், போராட வந்துள்ளோம் ஆனால் எதிர்ப்பாளர்களாக இஸ்லாமியர்களை மட்டும்தான் அரசாங்கம் கணக்கில் எடுத்துக் கொள்ளும். ஆனால் இதை எதிர்ப்பவர்கள் வீதிக்கு வர முடியமல், வர முடியாமல் இருந்தால் அவர்களை ஆதரவாளர்கள் என்று தான் அரசாங்கம் எடுத்துக் கொள்ளும். எனவே நமது எதிர்ப்பை எந்த வகையிலாவது, இப்போது கையெழுத்து இயக்கம் நடத்தினார்கள் கையெழுத்து போடுவோம், அரசாங்கத்திற்கு கடிதம் எழுதலாம், நாமெல்லாம் எதிராக இருக்கிறோம் என்பதை சொல்லிக்கொண்டே இருப்போம், ஜனநாயக, உரிமைப் போராட்டங்கள் எப்போதும் தோற்றதில்லை நாமும் வெற்றி பெறுவோம் இந்த ஜனநாயகத்திற்கு புறம்பான, அரசியல் சட்டத்திற்கு புறம்பான ஆட்சியை எதிர்த்து போராடுவோம்.

மற்றொன்றையும் கூறி விட வேண்டும், தற்போது இரண்டு தீர்ப்புகள் வந்துள்ளன.

ஒரு வழக்கு ஜபேதா பேகம் என்ற இஸ்லாமியப் பெண்ணுடையது. அவரது பான்கார்டு, குடும்ப அட்டை, இரண்டு வங்கிக் கணக்குப் புத்தகங்கள், அவரது அப்பா ஜாபேத் அலியின் NRC பதிவு விவரங்கள், அவர்து தாத்தா, பாட்டி, பெற்றோர்கள், கணவர் ஆகியோருடன் இணைந்து அவர் பெயரும் உள்ள வாக்காளர் பட்டியல்கள், நில வரி இரசீதுகள் போன்ற 14 வகை ஆவணங்களைக் காட்டியும் தனது குடியுரிமையை ஏற்காத குடியுரிமைப் பதிவேட்டு ஆணையத்தின் மறுப்பை எதிர்த்து அசாம் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார். அவரது கோரிக்கைகளை மறுத்து அவ்வழக்கின் தீர்ப்பு இப்போது வந்துள்ளது.

அவரது கோரிக்கையை மறுப்பதற்கான காரணங்களை நீதிபதிகள் கீழ்க்கண்டவாறு கூறியிருக்கிறார்கள். ஏர்கனவே வங்கிக் கணக்கு, பான் கார்டு ஆகியவற்றைக் குடியுரிமைக்கான் ஆவணமாக ஏற்றுக்கொள்ள முடியாது என 2016இல் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பினைச் சுட்டிக்காட்டி மறுத்துள்ளது.

அடுத்து, கிராம நிர்வாக அதிகாரி கொடுத்த நிலவரி இரசீதுகளை ஆவணமாக ஏற்கமுடியாது; ஆனால் திருமணத்துக்குப் பின்னர் கணவன் வீட்டுக்கு வந்துவிட்டார் என்றளிக்கும் சான்றிதழ் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் விளக்கமளித்துள்ளது.

வாக்காளர் பட்டியலில் அடுத்தடுத்துப் பெயர்கள் இருப்பினும், அவரது தாத்தா, பாட்டிக்கும், பெற்றோருக்கும், சகோதரருக்கும் உள்ள உறவுமுறை உரிய சான்றிதழ்கள் ( வாரிசு சான்றிதழ்கள் ) வழியே நிரூபிக்கப்படவில்லை போன்ற காரணங்களால் அவரது குடியுரிமைக் கோரிக்கை மனுவைத் தள்ளுபடி செய்திருக்கிறது உயர்நீதி மன்றம்.

மற்றொரு வழக்குக்கு, அசாம் உயர்நீதிமன்றத்தில் பிப்ரவரி 12 ஆம் தேதி ஒரு தீர்ப்பு வந்துள்ளது. ஒருவருக்கு குடியுரிமை இல்லையென்று கூறினார்கள். யாரைச் சொல்கிறார்களென்றால், முனீந்திர பிஸ்வாஸ் என்கின்ற இந்துக்குத்தான் சொல்கிறார்கள். அவர் அப்பா இந்திர மோகன் பிஸ்வாஸ் இராணுவத்தில் பணியாற்றியவர். அவருடைய தாத்தா துர்கா சரண் பிஸ்வாஸ், அவரும் இராணுவத்தில் பணியாற்றியவர். இராணுவத்தில் பணியாற்றியவரின் பேரனுக்கு குடியுரிமை இல்லையென்று கூறிவிட்டார்கள். அவர், 1964,1970 ஆகிய ஆண்டுகளில் அவர் பெயரில் நிலங்களைவாங்கியுள்ளார்; அவற்றைஆவணங்களாகக் காண்பிக்கிறார், வாக்காளர் அட்டையையும் கொண்டுபோனார், அவர்கள் சொல்கிறார்கள் 1997 வாக்காளர் பட்டியலில்தான் உள்ளது; அதற்கு முன்னர் எங்கே என்று கேட்கிறார்கள். 1997 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலை காண்பிப்பதே கடினம்; அதற்கு முன்பான தேர்தல்களின் வாக்காளர் பட்டியல்களை ஒரு சாதாரண குடிமகன் எப்படிப் பெற முடியும், எப்படிக் காண்பிப்பது? நீ கொடுத்த சொத்து ஆவணம் என்பது தனி நபர் ஆவணம். அது பதிவானதை உரிய சாட்சிகளுடன் நிரூபிக்கவில்லை என்பதால் ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கூறுகிறது உயர்நீதி மன்றம்; 1964இல் பதிவானபோது விற்றவர், 21 வயதுள்ளவராக இருந்திருந்தாலே அவருக்கு

இப்போது 77 வயதாக இருக்கும். 30,40 வயதானவர் என்றால் நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள். சாட்சிகளுக்கும் இதுவே பொருந்தும். இதனைக் காரணமாகக் காட்டி சொத்து ஆவணத்தை சான்றாக ஏற்க மறுத்துள்ளது; ஏற்றுக் கொள்ள முடியாது என்று நிராகரித்து விட்டார்கள். குடியுரிமை மறுத்த தீர்ப்பு கடந்த 12 ஆம் தேதி வந்துள்ளது. அன்றாடம் வேலைக்காக இடம் பெயர்ந்து வீடில்லாதவர்களுக்கு, சொத்தில்லாதவர்களுக்கு மட்டுமல்ல; சொத்து வைத்துள்ளவர்களும் ஆவணங்களைக் காட்டினாலும், அதையும் ஏற்கமுடியாது என கூறுமளவுக்குத்தான் நீதி பரிபாலனம் உள்ளது.

குடியுரிமை திருத்தச் சட்டத்தில் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், வங்க தேசம் ஆகியவை மட்டும் குறிப்பிட்டு இருப்பதாலும், அந்தப் பகுதியில் இருந்து குடியேறியவர்கள் வட இந்தியாவுக்குத் தானே வந்து இருக்க முடியும்; அவர்களைப் பற்றிய சட்டத்திருத்தம் தானே இது என்று பலபேர் கருதிக் கொண்டு இருக்கலாம். ஆனால் தென்னிந்தியாவில் இருப்பவர்களுக்கு எந்த பாதிப்பும் வராது தானே என்றும் அமைதியாய் கூட இருக்கக்கூடும். ஆனாலும், ஒரு செய்தியை நாம் புரிந்து கொள்ள வேண்டும். குடியுரிமைத் திருத்தச் சட்டத்தால் தென்னிந்தியாவோ அல்லது குறிப்பாக தமிழகம் எந்த விதத்திலும் பாதிக்கப்படாது என்பது வேண்டுமானால் உண்மையாகக்கூட இருக்கலாம்.

ஆனால், தேசிய மக்கள் பதிவேடும் அதன் தொடர்ச்சியாக எடுத்துப் பதியப்படும் குடியுரிமைப் பதிவேடும் உறுதியாகத் தமிழகத்திலும், தென்னிந்தியாவிலும் பாதிப்புகளை ஏற்படுத்தத்தான் செய்யும்; குறிப்பாக தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஈழத்திலிருந்து ஈழப் போராட்டத்தின் காரணமாக இங்கு ஏதிலியாய் வாழ்ந்துவருகிற ஈழத் தமிழர்களை மட்டுமல்ல, இந்திய - இலங்கை அரசுகளின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1964 முதலாக 1984 வரைக்கும் இந்தியாவுக்கு இலங்கையிலிருந்து அழைத்து வரப்பட்ட மலையகத் தமிழர்கள், இந்திய வம்சாவளித் தமிழர்கள், ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தியாவிற்கு அழைத்து வரப்பட்டு இங்கு வாழ்கின்ற தமிழர்களும் சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடும். குறிப்பாக ஒரே இடத்தில் - குடியமர்த்தப்பட்ட இடத்திலேயே குறைந்த வருமானம் கிடைக்கிறது என்றாலும் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு சிக்கல்கள் குறைவாக இருக்கலாம்; ஆனால் தாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற பகுதிகளில்

கிடைக்கிற வருமானத்தை விட அதிக வருமானம் ஈட்டலாம் என்று கருதியோ அல்லது குழந்தைகளின் கல்வியைக் கருதியோ வேறு இடங்களுக்கு குடியேறி இருக்கிற - உதிரிகளாக வாழ்கிற -மலையகத் தமிழர்களும் இதில் பாதிக்க நேரிடும்.

அதோடு மட்டும் சிக்கல்கள் முடிந்துவிடும் என்று எண்ணிவிடாதீர்கள்; தேசிய மக்கள் பதிவேட்டில் பதிவுகளை செய்வது உள்ளூர் அளவிலான அரசு ஊழியர் தான். அவர்கள் தங்கள் சுய வெறுப்பின் காரணமாகவோ அல்லது லஞ்சம் கேட்டுக் கொடுக்காத கோபத்திலும் யாரை வேண்டுமானாலும் சந்தேகத்துக்குரியவர் என்று கூறிவிட நேரிடலாம். அவரே விரும்பாத போதிலும் அரசு உயர் அதிகாரிகளோ அல்லது அரசியல் செல்வாக்கு உள்ளவர்கள் அழுத்தம் காரணமாகவும் செய்ய நேரிடலாம்.

அந்த நேரங்களில் எல்லாம் மத்தியில் ஆட்சி செய்கிற - தமிழகத்திலும் தன்னுடைய ஆட்சி அதிகாரத்தை முழுமையாக வைத்துக் கொண்டிருக்கிற - இந்துத்துவவாதிகளின், பெருமுதலாளிகளின் கருத்தை ஏற்காதவர்களும், இணங்காதவர்களும் எதிர்ப்பவர்களும் கூட சந்தேகத்துக்கு உரியவர்கள் என்று குறிப்பிடப்படலாம். அதன் பின்னர் அவர்கள் அலைய நேரிடும். அதனைப் பார்த்து மகிழ்ச்சி அடைய அடையும் நோக்கத்தில் கூட இதை செய்ய முடியும்.

எனவே, பாதிப்பு என்பது நாற்பது ஐம்பது ஆண்டுகளுக்குள் இந்தியாவுக்குள், தமிழ்நாட்டிலும், கேரளாவிலும், கர்நாடகாவிலும் வாழ்ந்து வருகிற இந்திய வம்சாவளித் தமிழர்களை மட்டுமில்லை - மலையகத் தமிழர்களை மட்டுமில்லை, இந்த மண்ணிலேயே பிறந்து தலைமுறை தலைமுறையாய் வாழ்ந்துவரும் குடும்பத்தின் உறுப்பினர்கள் கூட தங்கள் பெற்றோரின் பிறந்தநாள் ஆவணத்தைக் கொடுக்க முடியவில்லை என்றால், அவர்கள் பிறந்த இடத்திற்கான சான்றுகளை அளிக்க முடியவில்லை என்றால், அவருடைய பிள்ளை தான் இவர் என்பதற்கான ஆவணங்களைக் கொடுக்க முடியவில்லை என்ற காரணத்திற்காகவும் அவர்களது குடியுரிமை மறுக்கப்படலாம் அல்லது தேவையற்ற வகையில் ஏறத்தாழ ஓராண்டு காலம் அலைக்கழிக்கப்படலாம் அல்லது அளவுக்கு அதிகமாக, அதிக செலவு செய்ய ஏற்படலாம் என்கிற ஆபத்தும் இதில் இருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

இது தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் இல்லை, இந்திய துணைக் கண்டத்தின் எல்லா பகுதிகளில் இருப்பவர்களுக்கும் இவை பொருந்தும். சொந்த வீடு கூட இல்லாமல் நடைபாதையில் வாழ்க்கை நடத்தும் மக்களுக்கு, அல்லது ஆற்றங்கரை ஓரத்திலும், சாக்கடை ஓரத்திலும், புறக்கணிக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களிலும் சிறு குடிசை அமைத்து வாழ்ந்து வருகிற மக்களுக்கும், தங்கள் வருமானத்திற்கான வேலைக்காக கட்டிட வேலையாக இருக்கலாம்; கரும்பு வெட்டுவதாக இருக்கலாம்; கல் உடைக்கலாம், அந்த வேலைகளுக்காக இடம் விட்டு இடம், மாநிலம் விட்டு மாநிலம் சென்று பணியாற்றுகின்ற ஏழை உழைப்பாளிகளுக்கு அல்லது பொது சமூகத்தில் இருந்து விலகி மலைகளில் சிறு குடிசை அமைத்து எவ்விதப் பதிவுகளும் அற்ற மக்களாய் பல நூற்றாண்டுகள் வாழ்ந்து வருகிற பழங்குடி மக்களுக்கும் இது பெரும் பாதிப்பாக இருக்கும் என்பதையும் சேர்த்து சிந்தித்து பார்க்க வேண்டும்.

எனவே, இச்சட்டம் இஸ்லாமியர்களுக்கு மட்டுமல்ல; இந்துக்களுக்கும் எதிரானது என்று தெரிந்து கொண்டு, இஸ்லாமியர்களின் முன்முயற்சிக்கு நன்றி கூறியவர்களாக, இந்துக்களும் அதிகளவில் வந்து சேருங்கள் எல்லா தரப்போரும் இணைந்து போராடுவோம், அனைவருக்கும் எதிரான சட்டம், சங்கிகள் தங்களுக்கு விருப்பம் இல்லாதவர்களை, தங்கள் கருத்தைஏற்காதவர்களை, இணங்காதவர்களை, எதிர்ப்பவரக்ளை நாட்டை விட்டு வெளியேற்ற, நாடற்றவர்களாக ஆக்கப் பயன்படும் சட்டம், இதை எதிர்த்து போராடுவோம்; வெற்றி பெறுவோம்.

○●○



அரசு நடத்தப் பணம் இல்லை என்று ஒரு இலட்சத்து 75 ஆயிரம் கோடி ரூபாயை ரிசர்வ் வங்கியிலிருந்து எடுத்தீர்கள். அதில் ஒன்றரை இலட்சம் கோடியை 800 பேருக்குக் கடன் தள்ளுபடி செய்துவிட்டீர்கள். 25 கோடிதான் மக்களுக்கு என அரசிடம் வந்திருக்கிறது. மீதி எல்லாம் வராத வங்கிக் கடன் தள்ளுபடிக்கு பயன்படுத்தி இருக்கிறீர்கள், என்ன செய்யப் போகிறீர்கள்? மத்திய அரசின் நிதி நிலைமை ஐசியூவில் இருக்கிறது என்று உங்கள் பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்ரமணியம் உள்ளிட்ட ஒவ்வொருவரும் இந்தியாவின் நிலையைச் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். 2020 செப்டம்பரில் நம்முடைய பணவீக்கம் 13ஆக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னதான் ஆகும்? இந்தச் சூழ்நிலையில் அதையெல்லாம் கவனிக்காமல் வளர்ச்சியைப் பற்றிக் கவனிக்காமல், முதலீட்டைப் பற்றி கவனிக்காமல், கிராமப்புற மக்களைப் பற்றிக் கவலை இல்லாமல், வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கும் இளைஞர்களைப் பற்றிய கவலையில்லாமல், இந்தச் சூழலில் எல்லாவகையிலும் பொருந்தாத சட்டம், மக்கள் விரோத சட்டம், அரசியல் சட்ட விரோத சட்டம், பொருளாதாரத்தை நிலை நிறுத்த முடியாத சட்டம் இந்தக் குடியுரிமை திருத்தச் சட்டம். எனவே இதற்கு எதிர்ப்பாக இருக்கிறோம் என்று காட்டுவதற்கு எந்த வகை யிலாவது நமது எதிர்ப்பைத் தொடர்ந்து காட்டிக்கொண்டே இருக்க வேண்டும்.

நிமிர்வோம் வெளியீடு

விலை ரூ. 15